
# ඇගයීම් වාර්තාව

## மதிப்பீட்டு அறிக்கை



## වාණිජ්‍යය හා මූල්‍යය

## வர்த்தகமும் நிதியும்

අ. පො. ස. (උ. පෙ.) විභාගය – 1988 අගෝස්තු

க. பொ. த. ப. (உயர் தர)ப் பரீட்சை – 1988 ஆகஸ்ட்

ஆராய்ச்சி, அபிவிருத்திக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு-02.

පර්යේෂණ හා සංවර්ධන ඒකකය,
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව,
මැලේ වීදිය,
කොළඹ 02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை ஆணையாளரிடமிருந்து,

அண்மைக் காலம்வரை க.பொ.த. (உ/த)ப் பரீட்சையின் முக்கிய நோக்கங்கள் மேற்படிப்பிற்குத் தகுதிவாய்ந்தோரைத் தெரிவு செய்தலாக இருந்தது. உயர்தரப் பரீட்சைச் சான்றிதழ் மேலும் முக்கியத்துவம் அடைந்திருப்பதால் சான்றிதழ் வழங்குதலும் இப்பரீட்சையின் ஓர் முக்கிய அம்சமாகிவிட்டது. இந்நோக்கங்களை எய்தும் பொருட்டு க.பொ.த. (உ/த)ப் பரீட்சை மதிப்பீட்டு அறிக்கை வெளியிடுதல் ஆரம்பிக்கப்பட்டது.

ஒவ்வொரு மதிப்பீட்டு அறிக்கையிலும் அவ்வப் பாடங்களில் பரீட்சார்த்திகளின் செயலாற்றலும், ஒவ்வொரு கேள்வியையும் அவர்கள் செய்திருக்கும் வகையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அண்மையில் வெளியாகிய அறிக்கைகளில் சில பாடங்களின் இலாகவச் சட்டிகளின் பகுதிகளும் உப பகுதிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத் தரவுகள், கட்டுப்படுத்தும் பிரதான பரீட்சகர்கட்கும், இவற்றை அநுஷ்டிக்கும் ஆசிரியர்கட்கும், கல்வி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்கட்கும் மிகவும் முக்கியமானவையாக அமையும்.

ஒவ்வொரு மதிப்பீட்டு அறிக்கையிலும் அவ்வப் பாடங்கட்குரிய வினாப் பத்திரங்களும், விடைகளில் எதிர்பார்க்கப்படும் பொருள் அடக்கமும், புள்ளி வழங்கும் திட்டமும், கட்டுப்படுத்தும் பிரதான பரீட்சகரின் குறிப்பும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது கற்பித்தல், கற்றல், மதிப்பீடு செய்தல் முறைகளுக்கு சுலபமான பின்னூட்டலுக்கு வசதியாக அமையும்.

கல்வி மேற்பார்வையாளர்கட்கும், ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கல்விமான்களுக்கும், பாடசாலை மாணவர்களால் பெறப்பட்ட தரங்கள் பற்றிய தரவுகள் உபயோகமான தகவல்களை வழங்கும். இது தவிர ஒவ்வொரு பாடத்திலும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற பாடசாலைகளின் பெயர்கள் விசேடமாக அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது அதிபர்களதும், ஆசிரியர்களதும், மாணவர்களதும் விடா முயற்சியையும் தியாகத்தையும் மெச்சி உற்சாகப்படுத்தும் நோக்குடன் செய்யப்பட்டது.

எனவே க.பொ.த. (உ/த) மதிப்பீட்டு அறிக்கை கற்றல், கற்பித்தல், மதிப்பீடு செய்தல், மேற்பார்வையிடல், ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு வேண்டிய தகவல் பொக்கிஷத்தை உள்ளடக்குகின்றது எனக் கருதலாம். க.பொ.த. (உ./த)ப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கட்கு, இவ்வறிக்கைகளில் இருக்கும் தகவல்களைக், கல்வியின் தரத்தை உயர்த்தும் பொருட்டு உபயோகிக்கும்படி சம்பந்தப்பட்ட அனைவரையும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

ஆதர் வெதமுல்ல,
பரீட்சை ஆணையாளர்.

ஆராய்ச்சி அபிவிருத்திஅலகு,
பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2,
10.03.1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


பகுதி 1 — பக்கம்

பாடத்தில் காட்டப்பட்டுள்ள செயலாற்றல் — 1 - XX

பகுதி 11

வினாக்களும் விடைகளும் சம்பந்தமான தகவல்கள் — 01-32

பகுதி 111

அவதானங்களும் பிரேரணைகளும் — 33-35


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. (உ.த.)ப் பரீட்சை - 1988

## மதிப்பீட்டு அறிக்கை - வர்த்தகமும் நிதியும்

### பகுதி 1

### பாடத்தில் காட்டப்பட்டுள்ள செயலாற்றல்

பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| | | | |
|---|---|---|---|
| பாடசாலை | : 24852 | மொழிமூலம் - சிங்களம் | : 25418 |
| தனியார் | : 7005 | - தமிழ் | : 6409 |
| | | - ஆங்கிலம் | : 30 |
| மொத்தம் | : 31857 | மொத்தம் | : 31857 |

அட்டவணை 01

பாடத்திற்கு முழுப் பரீட்சார்த்திகளும் பெற்ற புள்ளிகளின் பரம்பல்


| வகுப்பாயிடை | மீடிறன் | நூற்றுவீதம் | திரள் மீடிறன் | திரள் நூற்றுவீதம் |
|---|---|---|---|---|
| 90 - 100 | - | - | 31857 | 100.00 |
| 80 - 89 | 6 | 0.02 | 31857 | 100.00 |
| 70 - 79 | 110 | 0.35 | 31851 | 99.98 |
| 60 - 69 | 884 | 2.77 | 31741 | 99.64 |
| 50 - 59 | 3518 | 11.04 | 30857 | 96.86 |
| 40 - 49 | 7621 | 23.92 | 27339 | 85.82 |
| 30 - 39 | 8355 | 26.23 | 19718 | 61.90 |
| 20 - 29 | 7270 | 22.82 | 11363 | 35.67 |
| 10 - 19 | 3431 | 10.93 | 4093 | 12.85 |
| 00 - 09 | 612 | 1.92 | 612 | 1.92 |

இடை : 34.87

நியமவிலகல் : 13.16


ව.ශ. 23288 - 750 (91-06/28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உருவம் 01


ஒவ்வொரு வகுப்பாயிடையிலும் புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளின் நூற்றுவீதம்




உருவம் 02

இப் பாடத்தில் பெற்ற புள்ளிகள் தொடர்பான திரள் மீடிறன்
(நூற்று வீதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உருவம் - 03

1985, 1986, 1987, 1988 ஆம் ஆண்டுகளில் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பகுப்பு

நோக்கல்கள்

| | 1985 | 1986 | 1987 | 1988 |
|---|---|---|---|---|
| இடை | 38.27 | 36.55 | 37.36 | 34.87 |
| நியம விலகல் | 13.71 | 13.04 | 14.45 | 13.16 |
| 39 புள்ளிகட்கு மேல் பெற்ற நூற்றுவீதம் | 48.74 | 42.81 | 46.10 | 38.16 |
| 49 புள்ளிகட்கு மேல் பெற்ற நூற்றுவீதம் | 21.97 | 16.71 | 21.45 | 14.18 |
| 69 புள்ளிகட்கு மேல் பெற்ற நூற்றுவீதம் | 00.75 | 00.45 | 00.86 | 00.36 |

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அட்டவணை 02

வர்த்தகமும் நிதியும் 1இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்.

| வகுப்பாயிடை | மீடிறன் | நூற்றுவீதம் | திரள் மீடிறன் | திரள் நூற்றுவீதம் |
|---|---|---|---|---|
| 90 - 100 | - | - | 30798 | 100.00 |
| 80 - 89 | 6 | 0.02 | 30798 | 100.00 |
| 70 - 79 | 222 | 0.72 | 30792 | 99.98 |
| 60 - 69 | 1478 | 4.80 | 30570 | 99.26 |
| 50 - 59 | 4472 | 14.52 | 29092 | 94.46 |
| 40 - 49 | 7786 | 25.28 | 24620 | 79.94 |
| 30 - 39 | 7789 | 25.29 | 16834 | 54.66 |
| 20 - 29 | 5922 | 19.23 | 9045 | 29.37 |
| 10 - 19 | 2676 | 8.69 | 3123 | 10.14 |
| 00 - 09 | 447 | 1.45 | 447 | 1.45 |

இடை : 37.57

நியமவிலகல் : 14.01




உருவம் 04

வர்த்தகமும் நிதியும் 1இற்கு ஒவ்வொரு வகுப்பாயிடையிலும் புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளின் நூற்றுவீதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அட்டவணை - 03.

வர்த்தகமும் நிதியும் 11 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற
புள்ளிகளின் பகுப்பு

| வகுப்பாயிடை | மீடிறன் | நூற்றுவீதம் | திரள் மீடிறன் | திரள் நூற்றுவீதம் |
|---|---|---|---|---|
| 90 - 100 | - | - | 30765 | 100.00 |
| 80 - 89 | 15 | 0.05 | 30768 | 100.00 |
| 70 - 79 | 173 | 0.56 | 30750 | 99.95 |
| 60 - 69 | 821 | 2.67 | 30577 | 99.39 |
| 50 - 59 | 3689 | 11.99 | 29756 | 96.72 |
| 40 - 49 | 5485 | 17.83 | 26067 | 84.73 |
| 30 - 39 | 7498 | 24.37 | 20582 | 66.90 |
| 20 - 29 | 7602 | 24.71 | 13084 | 42.53 |
| 10 - 19 | 4319 | 14.04 | 5482 | 17.82 |
| 00 - 09 | 1163 | 3.78 | 1163 | 3.78 |

இடை : 33.32

நியம விலகல் : 14.61




உருவம் 05


வர்த்தகமும் நிதியும் 11 இற்கு ஒவ்வொரு வகுப்பாயிடையிலும் புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளின் நூற்றுவீதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை - 04


வர்த்தகமும் நிதியும் பாடத்தில் பரீட்சார்த்திகள் வினாக்களைத் தேர்ந்தெடுத்த வகை.

| வினா எண் | பத்திரம் 1 தேர்ந்த வினாக்கள் | பத்திரம் 11 தேர்ந்த வினாக்கள் |
|---|---|---|
| 1 | 99.53 | 99.53 |
| 2 | 88.15 | 82.07 |
| 3 | 61.74 | 81.02 |
| 4 | 69.64 | 77.29 |
| 5 | 80.08 | 73.43 |
| 6 | 56.38 | 19.53 |
| 7 | 41.19 | 57.79 |




உருவம் 06

வர்த்தகமும். நிதியும் 1இல், பரீட்சார்த்திகள் வினாக்களைத் தேர்ந்தெடுத்த வகை ( நூற்று வீதத்தில் )




உருவம் 07

வர்த்தகமும் நிதியும் 11ல் பரீட்சார்த்திகள் வினாக்களைத் தேர்ந்தெடுத்த வகை (சதவீதத்தில்)


அட்டவணை 05 அவ் அவ் வினாக்களுக்கு புள்ளிகளைப் பெற்ற வகை (சதவீதத்தில்)


| | 1வது தொகுதி (00-25%) | 2வது தொகுதி (26-50%) | 3வது தொகுதி (51-75%) | 4வது தொகுதி (76-100%) | 1வது தொகுதி (00-25%) | 2வது தொகுதி (26-50%) | 3வது தொகுதி (51-75%) | 4வது தொகுதி (76-100%) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 15.35 | 46.77 | 34.22 | 3.66 | 28.14 | 52.04 | 18.38 | 1.44 |
| 2 | 22.69 | 36.04 | 32.65 | 8.62 | 32.75 | 48.81 | 16.12 | 2.32 |
| 3 | 32.08 | 51.28 | 16.20 | 0.45 | 52.72 | 34.98 | 11.52 | 0.78 |
| 4 | 55.57 | 99.19 | 5.08 | 0.16 | 46.85 | 40.07 | 11.40 | 1.68 |
| 5 | 36.81 | 50.74 | 11.90 | 0.55 | 39.67 | 42.09 | 16.74 | 1.50 |
| 6 | 65.21 | 29.45 | 5.05 | 0.29 | 71.57 | 22.91 | 4.53 | 0.99 |
| 7 | 52.05 | 42.12 | 5.36 | 0.47 | 50.19 | 40.25 | 9.23 | 0.33 |

1ம் பத்திரம் 11ம் பத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

232-88




உருவம் 09

... ஒவ்வொரு வினாவிற்கும் புள்ளிகள் கிடைத்துள்ள வகை ( ... )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் 1 இன் இலாவகச் சுட்டி

| வினா எண் | பகுதி | பிரிவு | பகுதியின் இலாவகம் | வினாவின் இலாவகம் |
|---|---|---|---|---|
| 1 | i | அ | 0.73 | |
| | | ஆ | 0.58 | |
| | ii | அ | 0.96 | |
| | | ஆ | 0.61 | |
| | iii | அ | 0.80 | |
| | | ஆ | 0.69 | |
| | iv | அ | 0.67 | |
| | | ஆ - i | 0.64 | |
| | | ii | 0.59 | |
| | v | | 0.62 | |
| | vi | அ | 0.52 | |
| | | ஆ | 0.54 | |
| | vii | அ | 0.51 | |
| | | ஆ | 0.39 | |
| | viii | | 0.67 | |
| | ix | அ | 0.40 | |
| | | ஆ | 0.37 | |
| | x | i | 0.29 | |
| | | ii | 0.19 | |
| | | iii | 0.18 | |
| | xi | அ | 0.43 | |
| | | ஆ | 0.22 | |
| | xii | அ | 0.34 | |
| | | ஆ | 0.39 | 0.51 |

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விழு என் | பகுதி | பிரிவு | பகுதியின் இலாவகம் | விழுவின் இலாவகம் |
|---|---|---|---|---|
| 2 | i | அ | 0.52 | |
| | | ஆ | 0.57 | |
| | ii | அ | 0.55 | |
| | | ஆ | 0.36 | |
| | iii | அ | 0.56 | |
| | | ஆ | 0.65 | |
| | iv | அ | 0.66 | |
| | | ஆ | 0.55 | 0.53 |
| 3 | i | அ | 0.01 | |
| | | ஆ | 0.05 | |
| | ii | அ | 0.66 | |
| | | ஆ | 0.31 | |
| | iii | அ | 0.30 | |
| | | ஆ | 0.65 | |
| | iv | அ | 0.70 | |
| | | ஆ | 0.48 | 0.25 |
| 4 | i | அ | 0.69 | |
| | | ஆ | 0.46 | |
| | ii | | 0.28 | |
| | iii | அ | 0.38 | |
| | | ஆ | 0.01 | |
| | | இ | 0.09 | |
| | iv | | 0.17 | 0.29 |


23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வீடு இல | பகுதி | பிரிவு | பகுதியின் இலாவகம் | வீட்டின் இலாவகம் |
|---|---|---|---|---|
| 5 | i | அ i | 0.50 | |
| | | ii | 0.63 | |
| | | ஆ | 0.51 | |
| | ii | | 0.40 | |
| | iii | i | 0.36 | |
| | | ii | 0.25 | |
| | iv | அ | 0.45 | |
| | | ஆ | 0.34 | 0.38 |
| 6 | i | அ | 0.48 | |
| | | ஆ | 0.25 | |
| | ii | அ | 0.21 | |
| | | ஆ | 0.30 | |
| | iii | அ i | 0.25 | |
| | | ii | 0.21 | |
| | | iii | 0.29 | |
| | | ஆ | 0.45 | |
| | iv | அ | 0.24 | |
| | | ஆ | 0.57 | 0.30 |
| 7 | i | அ | 0.74 | |
| | | ஆ | 0.26 | |
| | ii | i | 0.28 | |
| | | ii | 0.38 | |
| | iii | அ | 0.68 | |
| | | ஆ | 0.14 | |
| | iv | | 0.31 | 0.33 |

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உருவம் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 07

## வினாத்தாள் II இன் இலாகவச் சுட்டிகள்

| வினா எண் | பகுதி | பிரிவு | பகுதியின் இலாகவம் | வினாவின் இலாகவம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | | 0.47 | |
| | ii | | 0.40 | |
| | iii | | 0.38 | |
| | iv | அ | 0.45 | |
| | | ஆ | 0.77 | |
| | v | அ | 0.93 | |
| | | ஆ | 0.59 | |
| | | இ | 0.42 | |
| | vi | அ | 0.59 | |
| | | ஆ | 0.50 | |
| | vii | | 0.69 | |
| | viii | | 0.23 | |
| | ix | அ | 0.84 | |
| | | ஆ | 0.38 | |
| | x | அ | 0.33 | |
| | | ஆ | 0.10 | |
| | xi | அ | 0.47 | |
| | | ஆ | 0.47 | |
| | xii | அ | 0.86 | |
| | | ஆ | 0.70 | 0.44 |
| 2 | 1 | | 0.20 | |
| | ii | | 0.49 | |
| | iii | அ | 0.85 | |
| | | ஆ | 0.65 | |
| | iv | அ | 0.26 | |
| | | ஆ | 0.31 | 0.41 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வினா எண் | பகுதி | பிரிவு | பகுதியின் இலாகவம் | வினாவின் இலாகவம் |
|---|---|---|---|---|
| 3 | i | | 0.44 | |
| | ii | அ | 0.42 | |
| | | ஆ | 0.43 | |
| | iii | அ | 0.48 | |
| | | ஆ | 0.33 | |
| | iv | | 0.06 | 0.35 |
| 4 | i | | 0.21 | |
| | ii | அ | 0.50 | |
| | | ஆ | 0.70 | |
| | iii | அ | 0.44 | |
| | | ஆ | 0.29 | |
| | iv | | 0.20 | 0.34 |
| 5 | i | அ | 0.03 | |
| | | ஆ | 0.71 | |
| | | இ | 0.66 | |
| | ii | | 0.39 | |
| | iii | | 0.20 | |
| | iv | அ | 0.60 | |
| | | ஆ | 0.28 | 0.39 |
| 6 | i | | 0.28 | |
| | ii | அ | 0.26 | |
| | | ஆ | 0.10 | |
| | iii | | 0.30 | |
| | iv | அ | 0.09 | |
| | | ஆ | 0.33 | 0.23 |

23288


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வினா எண் | பகுதி | பிரிவு | பகுதியின் இலாகவம் | வினாவின் இலாகவம் |
|---|---|---|---|---|
| 7 | i | | 0.33 | |
| | ii | அ | 0.21 | |
| | | ஆ | 0.58 | |
| | iii | அ | 0.16 | |
| | | இ i | 0.46 | |
| | | ii | 0.58 | |
| | iv | அ | 0.37 | |
| | | ஆ | 0.16 | 0.34 |

...Hindu M. V.
No.........

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உருவம் 11

வார்டுகளும் பிரிவும் 11ஆன் பகுதிகளினதும் பிரிவுகளினதும் லொகலச் சுட்டிகள்

நோக்கல்கள்

| | 1 வது வினாத்தாள் | 2 வது வினாத்தாள் |
|---|---|---|
| இடை | 37.57 | 33.32 |
| நியம விலகல் | 14.01 | 14.61 |
| 39 புள்ளிகட்கு மேல் பெற்ற நூற்றுவீதம் | 40.34 | 33.10 |
| 49 புள்ளிகட்கு மேல் பெற்ற நூற்றுவீதம் | 20.06 | 15.27 |
| 69 புள்ளிகட்கு மேல் பெற்ற நூற்றுவீதம் | 00.74 | 00.61 |
| கட்டாயமான வினாக்களைத் தவிர்ந்த மிகவும் விருப்பமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு வினாக்களும், அவைத் தேர்ந்தெடுத்தோரின் நூற்று வீதமும் | 2 - 88.15<br>5 - 80.08 | 2 - 62.07<br>3 - 81.02 |
| குறைவாக விரும்பப்பட்ட இரு வினாக்களும், அவைத் தேர்ந்தெடுத்தோரின் நூற்று வீதமும் | 7 - 41.19<br>6 - 56.38 | 6 - 19.53<br>7 - 57.79 |
| அதிகூடிய இலாகவச் சுட்டி கொண்ட பகுதிகள்/பிரிவுகள் இரண்டும் அவற்றின் இலாகவச் சுட்டிகளும் | 1 - ii அ 0.96<br>1 - iii அ 0.80 | 1 - v அ -0.93<br>1 -xii அ -0.86 |
| அதி குறைந்த இலாகவச் சுட்டி கொண்ட பகுதிகள்/பிரிவுகள் இரண்டும் அவற்றின் இலாகவச் சுட்டிகளும் | 3 - i அ 0.01<br>4 - iii ஆ 0.01 | 5 - i அ 0.03<br>5 - iv 0.06 |
| அதிகூடிய செயலாற்றலைக் காட்டும் இரு வினாக்களும் அவ்வவ் வினாக்களுக்கென நியமித்த புள்ளிகளில் 50%ற்கு மேல் பெற்றோரின் நூற்று வீதமும் | 2 - 41.27<br>1 - 37.88 | 1 - 19.82<br>2 - 18.44 |
| அதி குறைந்த செயலாற்றலைக் காட்டும் இரு வினாக்களும், அவ்வவ் வினாக்களுக்கென நியமித்த புள்ளிகளில் 50%ற்கு மேல் பெற்றோரின் நூற்று வீதமும். | 4 - 5.24<br>6 - 5.34 | 6 - 5.52<br>7 - 9.56 |

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அட்டவணை 08

## கல்வி மாவட்ட ரீதியில் வர்த்தகமும் நிதியும் பாடத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்ற வகை (சதவீதத்தில்)

| மாவட்டம் | தோற்றிய பரீட்சார்த்திகள் | விசேட சித்தி பெற்றோர் A % | திறமைச் சித்தி பெற்றோர் B % | திறமைச் சித்தி பெற்றோர் C % | சாதாரண சித்தி பெற்றோர் S % | மொத்தச் சித்தி பெற்றோர் % | சித்தி அடையாதோர் % |
|---|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 134 | 0.00 | 0.00 | 3.73 | 35.82 | 39.55 | 60.45 |
| அநுராதபுரம் | 451 | 0.00 | 0.00 | 7.10 | 31.71 | 38.80 | 61.20 |
| பண்டாரவளை | 783 | 0.00 | 0.64 | 9.45 | 38.31 | 48.40 | 51.60 |
| மட்டக்களப்பு | 193 | 0.52 | 3.11 | 30.57 | 42.49 | 76.68 | 23.32 |
| சிலாபம் | 467 | 0.00 | 0.64 | 15.20 | 42.40 | 58.24 | 41.76 |
| கொழும்பு | 4200 | 0.21 | 2.50 | 17.52 | 38.43 | 58.67 | 41.33 |
| காலி | 1685 | 0.00 | 0.42 | 11.10 | 36.74 | 48.25 | 51.75 |
| கம்பஹா | 1721 | 0.06 | 1.10 | 13.54 | 38.64 | 53.34 | 46.66 |
| கோமாகம | 1160 | 0.09 | 1.21 | 14.91 | 36.98 | 53.19 | 46.81 |
| யாழ்ப்பாணம் | 2193 | 0.50 | 5.11 | 27.13 | 41.72 | 74.46 | 25.54 |
| கல்முனை | 277 | 0.36 | 2.17 | 28.16 | 46.21 | 76.90 | 23.10 |
| களுத்துறை | 1585 | 0.00 | 0.32 | 10.16 | 38.30 | 48.77 | 51.23 |
| கண்டி | 2441 | 0.00 | 0.33 | 7.50 | 31.30 | 39.12 | 60.88 |
| கேகாலை | 1086 | 0.00 | 0.83 | 9.76 | 40.61 | 51.20 | 48.80 |
| கிளிநொச்சி | 111 | 0.00 | 4.50 | 27.03 | 42.34 | 73.87 | 26.13 |
| குளியாப்பிட்டி | 421 | 0.24 | 0.24 | 9.03 | 39.90 | 49.41 | 50.59 |
| குருநாகல் | 863 | 0.00 | 0.46 | 6.84 | 28.62 | 35.92 | 64.08 |
| மன்னார் | 114 | 1.75 | 3.51 | 39.47 | 39.47 | 84.21 | 15.79 |
| மாத்தளை | 436 | 0.00 | 1.15 | 13.76 | 39.91 | 54.82 | 45.18 |
| மாத்தறை | 1080 | 0.09 | 0.19 | 7.96 | 32.50 | 40.74 | 59.26 |
| மினுவாங்கொடை | 1019 | 0.00 | 0.39 | 6.38 | 35.53 | 42.30 | 57.70 |
| மொனராகலை | 167 | 0.00 | 0.00 | 5.39 | 38.92 | 44.31 | 55.69 |
| முல்லைத்தீவு | 85 | 0.00 | 2.35 | 34.12 | 47.06 | 83.53 | 16.47 |
| நிக்கவரட்டிய | 109 | 0.00 | 0.00 | 1.83 | 30.28 | 32.11 | 67.89 |
| நுவரெலியா | 524 | 0.00 | 0.76 | 11.64 | 38.17 | 50.57 | 49.43 |
| பொலொன்னறுவை | 279 | 0.00 | 0.00 | 7.17 | 35.84 | 43.01 | 56.99 |
| புத்தளம் | 74 | 0.00 | 0.00 | 17.57 | 35.14 | 52.70 | 47.30 |
| இரத்தினபுரி | 786 | 0.25 | 0.51 | 11.45 | 35.24 | 47.46 | 52.54 |
| தங்கல்லை | 228 | 0.00 | 0.00 | 5.26 | 28.95 | 34.21 | 65.79 |
| திருகோணமலை | 132 | 0.00 | 0.76 | 9.09 | 39.39 | 49.24 | 50.76 |
| வவுனியா | 48 | 0.00 | 2.08 | 6.25 | 43.75 | 52.08 | 47.92 |
| மொத்தம் | 24852 | - | - | - | - | - | - |
| மொத்தமாகத் தோற்றியோரில் குறிப்பிட்ட தரங்களைப் பெற்றோரின் சதவீதம் | | 0.12 | 1.35 | 13.39 | 37.13 | 51.99 | 48.01 |

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உருவம் 12

கல்வி மாவட்ட ரீதியில் வர்த்தகமும் நிதியும் பாடத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்ற வகை (நூற்று வீதத்தில்)

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கல்கள்

| | |
|---|---|
| 1. வர்த்தகமும் நிதியும் பாடத்தில் பாட சாலைப் பரீட்சார்த்திகளில் அதிகூடிய அ நூற்றுவீதச் சித்தி பெற்ற ஐந்து கல்வி மாவட்டங்களும் அவ்வக் கல்வி மாவட்டங் களில் பரீட்சைக்குத் தோற்றியோரின் எண்ணிக்கையும், சித்தியெய்தியோரின் நூற்றுவீதமும். | 1. கொழும்பு - 114-84.21<br>2. யாழ்ப்பாணம் - 85-83.53<br>3. வவுனியா - 277-76.90<br>4. திருகோணமலை - 193-76.68<br>5. மன்னார் -2193-74.46 |
| 2. வர்த்தகமும் நிதியும் பாடத்தில் பாட சாலைப் பரீட்சார்த்திகளில் அதி குறைந் த நூற்றுவீதச் சித்தி பெற்ற ஐந்து கல்வி மாவட்டங்களும், அவ்வக் கல்வி மாவட்டங்களில் பரீட்சைக்குத் தோற்றி யோரின் எண்ணிக்கையும், சித்தி எய்தி யோரின் நூற்றுவீதமும் | 1. மொனறாகலை - 109-32-11<br>2. நிக்கவெரட்டிய - 228-34.21<br>3. முல்லைத்தீவு - 863-35.92<br>4. புத்தளம் - 451-38.80<br>5. பொலன்னறுவை -2441-39.12 |
| 3. வர்த்தகமும் நிதியும் பாதத்தில் முதல் ஐந்து புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் கற்ற பாடசாலைகளும் விலாசமும் | 1. கொ/டீ.எஸ்.சேனநாயக்க வி. கொழும்பு 7.<br>2. கொ/விசாகா வித்தி. கொழும்பு 4.<br>2. கொ/புனித தோமஸ் வி. கல்கிஸ்ஸ.<br>4. கொ/றோயல் கல்லூரி, கொழும்பு 7<br>5. இ/உடகம ம.வி. பின்னவல, புலாங்கொட.<br>5. கொ/விசாகா வித். கொழும்பு 4.<br>7. கொ/டீ.எஸ். சேனநாயக்க வி. கொழும்பு 7. |

## பகுதி – 11.

## வினாக்களும் விடைகளும் சம்பந்தமான தகவல்கள்.

### 1ம் வினாப்பத்திரம்.

### 1ம் வினா.

1. (i) (அ) வர்த்தகமென்பதால் நீர் விளங்கி கொள்வது யாதென விளக்குக.
(விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) தற்கால உலகில் வர்த்தக முயற்சிகள் துரிதமாக விரிவடைந்தமைக்கு ஏதுவான **இரு** காரணங்களைத் தருக. (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ii) (அ) கைத்தொழிலொன்றின் இட அமைவைத் துணியும் பொழுது கருத்திற் கொள்ளவேண்டிய **நான்கு** காரணிகளை எடுத்துரைக்க. (விடைக்கு 2 வரிகள் போதுமானது.)

(ஆ) அரசதுறைக் கைத்தொழிலொன்றையும் அக்கைத்தொழிலை அவ்வட்டாரத்தில் அமைத்தற்குப் பொறுப்பாயுள்ள பிரதான காரணியையும் குறிப்பிடுக. (விடைக்கு 1 வரி போதுமானது)

(iii) (அ) பங்குடைமை ஒன்றுடன் ஒப்பிடுகையில் தனியாள் சொத்துவமொன்றின் **நான்கு** குறைபாடுகளை எடுத்துரைக்க. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) அத்தகைய குறைபாடுகள் உள்ளபோதும் தொழின்முயற்சி உலகில், பங்குடைமைகளிலும் பார்க்கத் தனியாள் சொத்துவங்கள் கூடுதலாக இருப்பதற்கான **இரு** காரணங்களைத் தருக.
(விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(iv) (அ) வேறுபட்ட பங்குடைமை வகைகளுள் இலங்கையில் மிகுதியாகக் காணப்படும் பங்குடைமை வகை யாது? (விடைக்கு 1 வரி போதுமானது)

(ஆ) இப்பங்குடைமை வகை தொடர்பில் பின்வருவனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(i) பொறுப்பு (ii) வரிகளின் கொடுப்பனவு
(விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(v) மக்கள் கம்பனிகளை அறிமுகஞ் செய்தலின் பிரதான நோக்கத்தை எடுத்துரைத்து மக்கள் கம்பனியொன்றுக்கும் தனியார் வரையறுத்த பொறுப்புக் கம்பனியொன்றுக்குமிடையிலான **நான்கு** வேறுபாடுகளைத் தருக. (விடைக்கு 8 வரிகள் போதுமானது.)

(vi) (அ) கரை கடந்த ஒரு கம்பனிக்கும் (off-shore company) வதிவற்ற கம்பனியொன்றுக்குமிடையிலான வேறுபாட்டை எடுத்துககாட்டுக. (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) கரை கடந்த கம்பனிகள் இலங்கைக்கு ஏன் முக்கியமானவை? (விடைக்கு 1 வரி போதுமானது)

(vii) (அ) உரிமை வழங்கீடு, மிகையூதிய (உபகாரப் பண) வழங்கீடு என்பவற்றினூற கருதபடுவது யாதென விளக்குக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) ஒரு கம்பனியின் நிதி நிலையை அவை எங்ஙனம் பாதிக்கும்? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(viii) ஒரு வரையறுத்த பொதுப் பொறுப்புக் கம்பனியினால் நடத்தப்படவேண்டிய **இரு** வகையான பொதுக் கூட்டங்களை எடுத்துக்கூறி அவற்றுள் **ஒன்றின்** நோக்கத்தைச் சுருக்கமாக விளக்குக.
(விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ix) (அ) கம்பனியொன்றின் ஆண்டு விவரத்திரட்டாவது யாது? (விடைக்கு மூன்று வரிகள் போதுமானது
(ஆ) ஆண்டு விவரத் திரட்டுடன் இணைந்து செல்லவேண்டிய ஆவணங்கள் எவை?
(விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(x) பின்வருவன தொடர்பில், ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வெளிவழியானது ஒரு கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபன வெளிவழியிலிருந்து எங்ஙனம் வேறுபடும்?

(i) உடைமை (ii) நிருவாகம் (iii) கணக்காய்வு
(விடைகது 6 வரிகள் போதுமானது)

[ மறுபக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(xi) (அ) உடைமை, உருவாக்கம் என்பன தொடர்பில் ஒரு பொதுக் கூட்டுத்தாபனம் அரசுக்குச் சொந்தமான ஒரு வரையறுத்த பொறுப்புக் கம்பனியிலிருந்து எவ்வகையில் வேறுபடும்? (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) அத்தகைய கம்பனிகள் ஏன் தாபிக்கப்படுகின்றன? (விடைக்கு 1வரி போதுமானது)

(xii) (அ) அரசாங்கத் திணைக்களம் ஒன்றினுல் தொழிலொன்றை (வியாபாரம்) வெற்றிகரமாக நடத்துவதற்குள்ள இரு தடைகளைக் குறிப்பிடுக. (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) இந்த இருதடைகளையும் வெல்வதற்கான இரு முறைகளை எடுத்துரைக்க. (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

**எதிர்பார்க்கப்படும் விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

(1) (i) (அ) பொருட்கள் சேவைகளின் விநியோகத்தோடு தொடர்பான எல்லா நடவடிக்கைகளையும் இது உள்ளடக்குகின்றது. அதாவது உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகமும், அவற்றுடன் தொடர்பான உதவிச் சேவைகளும். ( 1 புள்ளி ).

(ஆ) (1) சந்தைக்கான பரும்படியாக்கம்.
(2) சர்வதேச வர்த்தகம்.
(3) சிறப்புத் தேர்ச்சி.
(4) போட்டி.
(5) வியாபார உதவிச்சேவைகளின் விரிவாக்கம். அதாவது தொடர்பு படுத்தல், போக்குவரத்து, காப்புறுதி, சர்வதேச நிதி, தொழில் நுட்பம் போன்றவற்றின் விரிவு.

(2 புள்ளிகள், ஒரு காரணிக்கு 1 வீதம்)

(ii) (அ) (1) மூலப்பொருட்கள்.
(2) உழைப்பு/தொழிலாளர்.
(3) சக்தி/எரிபொருள்.
(4) சந்தை.
(5) சூழல்/காலநிலை.
(6) போக்குவரத்து போன்ற வேறு வசதிகள்.

(ஒரு காரணிக்கு ½ புள்ளி வீதம் 4 காரணிகட்கு 2 புள்ளிகள்)

(ஆ) பிலியந்தலை மத்பாண்ட தொழிற்சாலை – மூலப் பொருட்கள்.
(வேறு உதாரணங்கள் பொருத்தமாயின் புள்ளி வழங்கப்படும்)

(1 புள்ளி)

(iii) (அ) (1) போதியளவு மூலதனமின்மை.
(2) காலத்தை பொருத்தமட்டில் கூடுதலான நிச்சயமற்ற தன்மை.
(3) தனிமனித தீர்மானம் திறமையானதாக/மிகச்சிறந்ததாக அமையாமற் போகலாம்.
(4) ஆபத்து/நட்டம் தனி ஒருவரால் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.
(5) பல்வேறு திறமைகளுடன் கூடியவர்கள் ஒன்றிணைந்து வியாபாரமொன்றை நடாத்துவதற்கான சந்தர்ப்பங்களில்லை.

($4 \times \frac{1}{2}$ = 2 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) (1) ஆரம்பித்தற்கும் முடிவாக்குவதற்கும் இலகு.

(2) பங்குடமை ஒப்பந்தம் தயாரித்தல் போன்ற நடைமுறைகளைப் பின்பற்றத் தேவையில்லை.

(3) உடனடியாகத் தீர்மானம் எடுக்க முடிதல்.

(4) இலாபம் முழுவதையும் அவரே பெற்றுக்கொள்ளலாம்.

(2×½ = 1 புள்ளி)

(iv) (அ) பொதுவான அல்லது வரையறுக்கப்படாத பங்குடைமை. (1 புள்ளி)

(ஆ) (1) வரையறுக்கப்படாத பொறுப்பு - சொந்தச் சொத்துக்களைக் கூடத் தியாகம் செய்ய வேண்டி ஏற்படலாம். (1 புள்ளி)

(2) வரிகள் பங்குடமையிலன்றி, பங்காளர்களால் செலுத்தப்படல் வேண்டும். (1 புள்ளி)

(v) (அ) பிரதான நோக்கம்: உரித்துடைமையினைப் பரவலாக்கல். (1 புள்ளி)

<u>வேறுபாடுகள்</u>.

(1) மக்கள் கம்பனி பங்குகளின் பெறுமதி 10/- இனைவிடக் கூடக் கூடாது. ஆனால் தனியார் வரையறுத்த பொறுப்புக் கம்பனிக்கு வரையறை கிடையாது.

(2) மக்கள் கம்பனியில் ஒரு தனிபட்ட பங்காளர் வாங்கிய மூலதனத்தின் 10% த்திற்கு மேல் கொள்வனவு செய்ய முடியாது. ஆனால் தனியார் வரையறுத்த பொறுப்புக் கம்பனியில் வரையறை கிடையாது.

(3) மக்கள் கம்பனியில் மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட இயக்குனர்கள் இருத்தல் வேண்டும். தனியார் வரையறுத்த பொதுக்கம்பனியில் ஆகக் குறைந்தது ஒரு இயக்குனர்.

(4) ஒரு மக்கள் கம்பனியின் இயக்குனர், இன்னொரு கம்பனியில் இயக்குனராக இருக்க முடியாது. தனியார் வரையறுத்த பொறுப்புக் கம்பனியில் அது சாத்தியமானது.

(5) ஒரு மக்கள் கம்பனியின் ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை 50. தனியார் வரையறுத்த பொறுப்புக் கம்பனியில் ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை 2 ஆகும்.

(6) மக்கள் கம்பனி பங்குகள் கைமாறத் தக்கன; தனியார் வரையறுத்த பொறுப்புக் கம்பனிப் பங்குகள் கைமாறத்தக்கவையல்ல.

(4×½ = 2 புள்ளிகள்)

2328

Kilinochchi Hindu M. V.
No.
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vi) (அ) கரைகடந்த கம்பனிகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டு வெளி நாடுகளில் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்றன. வதிவற்ற கம்பனிகள் வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்டு அதைத் தொடர்ந்து இலங்கையில் பதிவு செய்யப்பட்டு இலங்கையின் வியாபார நடவடிக் கைகளைக் கொண்டு நடாத்துகின்றன. (2 புள்ளி)

(ஆ) (1) வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்தல் (உள் நாட்டு-முதலீட்டாளர்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்கின்றனர்)

(2) வெளிநாடுகளில் உழைத்த பங்கிலாபத்தைக் கொண்டுவர முடிதல்.
(ஒரு காரணி எழுதியிருந்தால் போதுமானது) (1 X 1=1 புள்ளி)

(vii) (அ) உரிமை வழங்கீடு என்பது, அனுமதிக்கப்பட்ட மூலதனத்திலிருந்து வழங்கப்படாதிருக்கின்ற மூலதனத்தினை அல்லது அதன் ஒரு குறிப்பிட்ட பகுதியினை தற்போதுள்ள பங்காளர்கட்கு மட்டும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வழங்கல். இதற்குப் பணம் செலுத்த வேண்டும். (1 புள்ளி)

உபகாரப் பங்கு வழங்கல் என்பது ஒதுக்கங்களைப் பயன்படுத்தி அனுமதிக்கப்பட்ட மூலதனத்தின் வழங்கப்படாதிருக்கின்ற மூலதனத்தினை அல்லது அதன் ஒரு பகுதியை பங்காளர்கட்கும் தொழிலாளர்கட்கும் வழங்குதல். இதற்கு பணம் செலுத்த வேண்டியதில்லை. (1 புள்ளி)

(ஆ) உரிமை வழங்கல் கம்பனிக்கு மேலதிக நிதியினைக் கொண்டு வருகின்றது. ($\frac{1}{2}$ புள்ளி)

உபகாரப் பங்கு வழங்கலானது கம்பனிக்கு வெளியே நிதி பாய்வதைத் தடுக்கின்றது. ($\frac{1}{2}$ புள்ளி)
(உபகாரப் பணக் கொடுப்பனவின் பாதிப்பை எழுதியிருந்தாலும் $\frac{1}{2}$ புள்ளி வழங்கலாம்)

(viii) (1) சட்டமுறைப் பொதுக் கூட்டம் - கம்பனி தொடங்கியதில் இருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஆனால் மூன்று மாதத்திற்கு முன் இக்கூட்டம் கூட்டப்பட வேண்டும். இக் கூட்டத்தில் கம்பனிச் சொத்துக்கள், பங்குவழங்கீடு ஆரம்பச் செலவுகள் போன்ற விடயங்கள் தொடர்பான விபரங்கள் சமர்பிக்கப்படும்.

(2) வருடாந்தப்பொதுக் கூட்டம் வருடத்துக்கொருமுறை நடை பெறும். பங்குலாப வீதத்தைத் தீர்மானித்தல்/அங்கீகரித்தல், கணக்குகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளல் இயக்குனர்கள் கணக்காய்வாளர்களின் நியமனம் போன்ற விடயங்கள் இக்கூட்டத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

(3) அசாதாரண/விசேட பொதுக் கூட்டம்- முக்கியமாயின், இயக்குனர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அல்லது பங்காளரின் வேண்டுகோளுக்கு ஏற்ப மிக அவசரமான விடயங்கள் பற்றி கலந்துரையாட இக்கூட்டம் கூடப்படும் (3 புள்ளி)
(ஏதாவது இரு வகைக்கூட்டங்கள் குறிப்பிட்ட ஒவ்வொரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகள். ஒன்றின் நோக்கத்தை குறிப்பிட ஒரு புள்ளி).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(ix) (அ) பங்கு மூலதனத்தைக் கொண்ட கம்பனிகள் யாவும் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடத்திய பின் சமர்ப்பிக்கும் ஒரு அறிக்கை இதுவாகும். இதில் பங்காளர், வழங்கப்பட்ட பங்குகள், பொறுப்புக்கள், இயக்குனர்கள், கணக்காய்வாளர்கள் போன்ற விபரங்கள் அடங்கி இருக்கும். இவ் அறிக்கை கம்பனிப் பதிவாளருக்கு அனுப்பப்படுகிறது. (1 புள்ளி)

(x) (1) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடையானது அங்கத்தவர்களினதும், கூட்டுறவு மொத்த விற்பனை தாபன கடையானது கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தினதும் உடமையாகும். (1புள்ளி)

(2) பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கடையானது அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் சபையாலும், அதன் குழுவினாலும் நிர்வகிக்கப் படுகின்றது. கூ.மொ.வி.தாபனக்கடை கூ.மொ.வி. தாபனத்தால் நிர்வகிக்கப்படுகின்றது. (1 புள்ளி)

(3) கூ. ச. க் கடையானது கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் கூ. மொ. வி. தாபனக் கடையானது கூ. மொ. வி தாபனத்தினாலும் கணக்காய்வு செய்யப்படுகின்றது. (1 புள்ளி)

(xi)

(அ) உடமை – ஒரு பொதுக்கூட்டுத் தாபனம் அரசுடனையது. அரசுக்குச் சொந்தமான ஒரு வரையறுத்த பொறுப்புக்கம்பனியில் 51% அல்லது அதற்கு மேற்பட்ட வீதமான பங்குகள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கும். மீதி தனியார் துறைக்கு அல்லது பொது மக்களுக்குச் சொந்தமாக இருக்கும். (1 புள்ளி)

உருவாக்கம்–கூட்டுத்தாபனங்கள் அவை தொடர்பான சட்டங்களினாலும் அரசுக்கு சொந்தமான வரையறுத்த பொறுப்புக்கம்பனிகள் கம்பனிச் சட்டத்தின் கீழும் உருவாக்கப்படுகின்றன. (1 புள்ளி)

(ஆ) திற மையினை அதிகரிப்பதற்கு. ( 1 புள்ளி)

(xii)

(அ)(1) நிர்வாகச் சுற்றறிக்கைகள், நிதிச்சுற்றறிக்கைகள் போன்ற சுற்றறிக்கைகளினால் தீர்மானம் எடுத்தலில் தாமதம் ஏற்படுதல்.

(2) அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில், வியாபாரத் தீர்மானங் களை எடுப்பது தொடர்பான அறிவு குறைவாகக் காணப்படுவது.

(3) குறைவான ஊக்குவிப்புக்கள்.

(4) திறைசேரியினால் வழங்கப்படுகின்ற நிதிவரையறை.

(5) திறந்த திணைக்கள முறை – இலகுவாக ஒரு திணைக்களத்திலிருந்து இன்னொரு திணைக்களத்திற்கு மாற்றப்படுவதனால் தொழிலாளர்கள் சிறப்புத்தேர்ச்சியடைய முடிவதில்லை. (ஏதாவது இரண்டு தடைகள்.) (2X1 = 2 புள்ளிகள்)

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) (1) பொதுக் கூட்டுத்தாபனங்களை உருவாக்கல்.

(2) அரசுக்குச் சொந்தமான வரையறுத்த பொறுப்புக் கம்பனிகளைத் தாபித்தல்.

(3) சில ஊக்குவிப்புக்களை அறிமுகம் செய்தல்.

(ஏதாவது இரு முறைகள் $2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

<u>விடையிறுத்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்</u>:-

கட்டாய வினாவாகிய இதில் (i) வர்த்தகம் என்றால் யாது என்பது பற்றி தெளிவான விளக்கம் பல பரீட்சார்த்திகளுக்கு இருக்கவில்லை. அவ்வாறே (ii) அரச கைத்தொழிலொன்றைக் குறிப்பிடுவதற்கு பதிலாகப் பலர் அரச கூட்டுத்தாபனமொன்றையே குறிப்பிட்டு இருந்தனர். (iii) (அ) பிரிவில் உரிமை வழங்கீடு உபகார வழங்கீடு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சரியாகக் காட்டுவதற்குப் பலர் தவறிவிட்டனர். மேலும் (ix)ம் பிரிவு வினாவாகிய ஆண்டறிக்கை சம்பந்தமான தெளிவான விளக்கமற்றவர்களாகப் பலர் காணப்பட்டனர். இதே போல் (x), (xii) ஆகிய பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு இருந்த விடைகள் பெரும்பாலும் பிழையாகவே <u>இருந்தன</u>.

<u>2ம் வினா</u>.

2. (i) (அ) வணிகக குறியிடல் என்பதாற் கருதப்படுவது யாது? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) பொருள்களுக்கு வணிகக் குறியிடுதலின் விளைவாக சில்லறை வியாபாரி, நுகர்வோன் ஆகியோர்க்குக் கிடைக்கத்தகு அனுகூலங்கள் **இவ்விரண்டை** எழுதுக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ii) (அ) சுமைச்சீட்டு (வார்நாம்ம்) ஒன்றினால் நிறைவேற்றப்படும் **இரு** நோக்கங்களை விளக்குக. (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) சுமைச்சீட்டு ஒன்றுக்கும் ஒரு நட்டவீட்டுப் பத்திரத்துக்கும் இடையிலான தொடர்பு யாது? (விடைக்கு 5 வரிகள் போதுமானது)

(iii) (அ) தரவாணை (கட்டளையட்டவணை) எனப்படுவது யாது? (விடைக்கு 1 வரி போதுமானது)

(ஆ) 'பொருள் வரையறுத்த கட்டளையட்டவணை'க்கும்' 'பொருள்வரையறாக் கட்டளையட்டவணை'க்குமிடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக. (விடைக்கு 5 வரிகள் போதுமானது)

(iv) (அ) கழிவீடுகள் எங்ஙனம் தரகுக் கூலிகளிலிருந்து வேறுபடும்? (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) வியாபாரத்தில பயன்படுத்தப்படும் **மூன்று** வகையான கழிவீடுகளைச் சுருக்கமாக விளக்குக.

<u>எதிர்பார்க்கப்படும் விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்</u>.

(2) (i) (அ) வணிகக் குறியீடல் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளை அடையாளம் காண்பதற்கான பெயர்கள் பதங்கள் குறிகள் வடிவம் அல்லது இவை பலவற்றின் கூட்டு ஆகும். (2 புள்ளிகள்)

(ஆ) சில்லறை வியாபாரிக்கு.

(1) பிரபல்யமான வணிகக்குறியுடன் பொருட்களை இருப்பிலிடும் சாத்தியக்கூறு விற்பனையை அதிகரிக்க உதவுகிறது.

(2) பொருட்களைப்பற்றி, விளக்கப்படுத்தல் தேவையற்றது. (இலகுவான, தொடர்பு படுத்தல்.)

(3) வாடிக்கையாளர் தொடர்ந்து வருவதை ஊக்குவிக்கும்.

(4) சிறந்த வாடிக்கையாளர் உறவு. $(2 \times \frac{1}{2} = 1)$

நுகர்வோருக்கு.

(1) நன்கு அறிந்த பொருளைக் கொள்வனவு செய்ய முடிதல்.

(2) பரிசீலித்தல் தேவையற்றது.

$(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி) (3) எந்தச் சில்லறையான இடத்திலும் கொள்வனவு செய்ய முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) (அ) (1) பொருட்களின் உடைமையினைப்பொறுத்த வரையில் பகுதியளவில் கைமாறத்தக்க ஆவணம்.

(2) பரிசோதனை செய்யப்படுவதற்குப் பொருட்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்பதை அத்தாட்சிப்படுத்துகின்றது.

(3) கப்பல் மூலம் பொருட்களை அனுப்புவதற்கான ஒரு உடன்படிக்கை (2 × 1 = 2 புள்ளிகள்)

(இரண்டு நோக்கங்களுக்கு இரண்டு புள்ளிகள்)

(ஆ) ஒரு ஏற்றுமதியாளர் பழுதடைந்த பொருட்களைக் கப்பற் கம்பனியிடம் ஒப்படைக்கும் போது, குற்றமுள்ள ஆமைச்சீட்டைப் பெறுவதைத் தவிர்த்து, தூய சுமைச்சீட்டொன்றைப் பெறுவதற்காக அவரால் கப்பற் கம்பனிக்கு நட்டவீட்டுப் பத்திரமும் வழங்கப்படுகின்றது.

இந்நட்டவீட்டுப் பத்திரத்தின் மூலம், இறக்குமதியாளர் பொருட்களை ஏற்க மறுப்பதினால் கப்பற் கம்பனிக்கு ஏற்படும் ஏதும் நட்டங்களை ஏற்றுக்கொள்வதற்கு வாக்குறுதியளிக்கின்றார். (2 புள்ளிகள்)

(iii) (அ) வெளிநாடுகளிலிருந்து பொருட்கள் கட்டளையிடப்படும்போது அனுப்பப்படுகின்ற கட்டளையாகும். (2 புள்ளிகள்)

(ஆ) பொருள் வரையறுக் கட்டளையட்டவணையானது முகவர் பொருத்தமான பொருட்களைத் தெரிவு செய்வதற்கு அனுமதியளிக்கின்றது.
பொருள் வரையறுத்த கட்டளையட்டவணையானது பொருட்கள் தொடர்பான குறிப்பிட்ட விபரங்களைத் தருகின்றது. இதனால் பொருட்கள் குறிப்பிட்ட தன்மைகளை எல்லா வகையிலும் ஒத்திருத்தல் வேண்டும். (2 புள்ளிகள்)
(வேறுபாட்டைத் தந்திருந்தால் மட்டும் புள்ளி வழங்குக)

(iv) (அ) கழிவீடு எனப்படுவது பொருட்களை விற்கும்போது பட்டியல் விலையில் செய்யப்படும் ஒரு குறைப்பு ஆகும். தரகுக்கூலி எனப்படுவது, முதல்வருக்காக பொருட்களை விற்கின்ற அல்லது சேவைகளை வழங்குகின்ற ஒரு நபருக்கு பெறுமதிக்கு ஏற்றவாறு செய்யப்படுகின்ற ஒரு கொடுப்பனவாகும். (1 புள்ளி)

(ஆ) (1) கனியக்கழிவு - பெருமளவு கொள்வனவு செய்வதை ஊக்குவிக்க வழங்கப்படுகின்றது.

(2) பருவ காலக் கழிவு - குறிப்பிட்ட பருவகாலக் கேள்விக்கு முன் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வ[illegible]தை ஊக்குவிக்க வழங்கப்படுகின்றது.

(3) காசுக் கழிவு.

(4) வியாபாரக் கழிவு. (3 புள்ளிகள்)

(மூன்று வகைக் கழிவுகட்கும், ஒவ்வொன்றுக்கும் 1/2 புள்ளி வீதம் 1 1/2 புள்ளிகள். ஒவ்வொன்றையும் விளக்குவதற்கு ½ புள்ளி வீதம் 1½ புள்ளிகள்)

23298

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>விடையிறுத்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்.</u>

இது இலகுவானதும், அதிகமானோரால் விடையிறுக்கப்பட்டதுமான வினாவாகும். இவ் வினாவின் விடைக்குப் பரீட்சார்த்திகளால் அதிக புள்ளிகள் பெறப்பட்டு இருந்தன. எனினும் இதில் (iii)(அ) பிரிவில் தரவாணை பற்றி எழுதப்பட்ட பலரின் விடைகளில் அது வெளிநாட்டு வியாபாரத்தில் பொருள் கட்டளையிடுவதற்காகப் பயன்படும் ஒரு ஆவணம் என்பது குறிப்பிடப்படவில்லை.

<u>3 ம் வினா:</u>

3. (i) (அ) நியாய வர்த்தக ஆணைக்குழுவுக்கு நுண்ணாய்வு செய்வதற்கென ஒதுக்கப்பட்டுள்ள மூன்று பரப்புகளும் எவை? (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) இவ்வாணைக்குழுவினால் வழங்கப்பட்ட கட்டளையுடன் திருப்தியடையாத ஒரு தரப்பினருக்குக் கிடைக்கத்தக்கதாயுள்ள செயல்நெறி யாது? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ii) (அ) இலங்கைக் கட்டளைகள (SLS) குறியுடன் தரம் குறைந்த பண்டங்களை உற்பத்திசெய்யும உற்பத்தியாளர் ஒருவருக்கு எதிராக இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் மேறகொளளககூடிய நடவடிக்கைகள் யாவை? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) இலங்கையின் இறக்குமதி எற்றுமதி வியாபாரத்தில் இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் தற்போதைய கடமைக்கூறு பற்றி விளக்குக. (விடைக்கு 6 வரிகள் போதுமானது)

(iii) (அ) மொத்த விற்பனைக்கும் சில்லறை விற்பனைக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக. (விடைக்கு 5 வரிகள் போதுமானது.)

(ஆ) மொத்த விற்பனையாளரை நீக்குவதன் மூலம் பண்டங்களின் விலைகளைக் குறைக்க முடியுமெனக் கூறப்படுகிறது. அவ்வாறெனின் வியாபாரத்தில் மொத்தவிற்பனையாளர் ஏன் தொடர்ந்தும் இருந்து வருகிறாரென விளக்குக. (விடைக்கு 5 வரிகள் போதுமானது)

(iv) (அ) முகவர் எனப்படுபவர் யார்? (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) தனது அன்றாட வேலையின் போது முகவர் ஒருவர் அனுபவித்துவரும் மூன்று உரிமைகளை எடுத்துரைக்க. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

வினா 3. (1)(அ)(1) தனியுரிமை நிலைமையொன்று காணப்படுதல் அல்லது அதற்கான சாத்தியக்கூறு காணப்படுதல்.

(2) கம்பனிகள் ஒன்றிணைதல் அல்லது அதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுதல்.

(3) போட்டி எதிர்ப்பு நிலைமை அல்லது அதற்கான சாத்தியக்கூறு.

($3 \times 1 = 3$ புள்ளிகள்)

(ஆ) தீர்ப்பு வழங்கப்பட்ட 30 நாட்களுள் அப்பீல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். (1 புள்ளி)

(ii) (அ) (1) குறிபயன்படுத்துவதை இடைநிறுத்தல்.

(2) அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

($2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(இரண்டு நடவடிக்கைகள், ஒரு நடவடிக்கைக்கு $\frac{1}{2}$ புள்ளி வீதம்)

(ஆ) (1) சில விவசாயப் பொருட்களைப் பொறுத்த வரையில் இந்நிறுவனம் தரத்தைப் பரிசோதித்து, அவை தரமாக இருப்பின் தரச் சான்றிதழ் வழங்குகின்றது. இது ஏற்றுமதி அனுமதிப் பத்திரத்தைப் பெற வழங்கப்படுகின்றது.

(2) ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்ட கடல் உணவுப் பொருட்களைப் பரிசோதித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சில இறக்குமதிகளைப் பொருத்தவரையில் அவை தரமானவையா என்ப்பரிசோதிக்கிறது. அவை தரமானவை எனின் அப்படிப் பட்ட பொருட்களை சந்தைக்கு விட அனுமதிக்கிறது.

( 1 3 - 3 புள்ளிகள் )

(iii) (அ) மொத்த விற்பனையானது சில்லறை விற்பனையாளர்கட்கு அல்லது வேறு வர்த்தகர்கட்கு அல்லது கைத்தொழிற் பாவனையாளர்களுக்கு அல்லது நிறுவனப்பாவனையாளர்கட்கு அல்லது வர்த்தக பாவனையாளர் கட்கு விற்பனை செய்யும் நபர்கள் அல்லது நிறுவனங்களுடன் தொடர்பான நடவடிக்கைகள் யாவும்.

கடைசி நுகர்வோருக்கு பொருட்கள் சேவைகளை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்களுடன் தொடர்பான நடவடிக் கைகள் சில்லறை விற்பனையாகும். இந்நபர்கள் அல்லது நிறுவனங்கள் பெருமளவில் கடைசி நுகர்வோருக்கு விற்பனை செய்வர்.

(2புள்ளி)

(ஆ) உற்பத்தியாளருக்கும் சில்லறை விற்பனையாளருக்கும் இடையில் இடைப்பட்ட சேவையை ஒருவர் செய்யவேண்டி இருப்பதால் மொத்த விற்பனையாளர் தேவைப்படுகின்றனர். இல்லாவிடின் இவரின் சேவையை உற்பத்தியாளர் அல்லது வேறு நபர்கள் செய்யவேண்டி ஏற்படும் இது சாத்தியப்படாததாகையால் மொத்த வியாபாரி இருந்து வருகின்றார்.

( 2 புள்ளி )

(iv) (அ) முகவர் எனப்படுபவர் ஒரு முதல்வர் சார்பாகச் செயற்படுதல், முதல்வர் சார்பாக உடன்படிக்கைகளைச் செய்தல், முதல்வருக்காகச் சில கடமைகளைச் செய்தல், தரகு போன்ற கொடுப்பனவுகளை மேற்போந்த சேவைகளுக்காகப் பெறுதல் போன்றவற்றைச் செய்பவராவார். (புள்ளி - 1)

(ஆ) i. அன்றாட சேவைகளுக்காகக் கொடுப்பனவுகள்ளைப் பெறுதல்.

ii. முதல்வருக்காக உடன்படிக்கைகளின் ஈடுபடுதல்.

iii. உடன்படிக்கைக்கு ஏற்றவாறு ஆபத்து/பொறுப்பு என்பவற்றை முதல்வர் மீது சுமத்தல்.

iv. முதல்வர் உடன்படிக்கையில் குறிப்பிட்ட தொகைக் கொடுப்பனவைச் செய்யாவிடின், முதல்வரின் பொருட்களைத் தடுத்து வைத்தல்.

v. குறிப்பிட்ட முதல்வருக்கு முகவர் என்பதை வெளிப்படுத்தல்.

(1×3 = 3 புள்ளிகள்)

<u>விடையிறுத்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்</u>

இதுவும் பல பரீட்சார்த்திகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வினாவாகும். எனினும் சாதாரணமாக வியாபாரத்திற் பயன் படுத்தப்படும் தரகு, இலங்கைக் கட்டளைகள் பணியகம் போன்றனபற்றிக் கனிசமான தொகையினர் தெளிவான விளக்கம் கொடுக்கத் தவறியுள்ளனர்.

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4ம் வினா:**

4. (i) (அ) இலங்கைக்கு வெளிநாட்டு வியாபாரம் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்கு **மூன்று** நியாயங்கள் தருக. (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) இலங்கையின் 1986 ஆம் ஆண்டிற்கான இரு பிரதான ஏற்றுமதிகளை அவற்றின் பெறுமான ஒழுங்கில் நிரற்படுத்துக. (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ii) தேசிய பொதியிடல் மத்திய நிலையத்தினால் வழங்கப்பட்டுவரும் நான்கு சேவைகளைக் கூறுக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(iii) (அ) இலங்கையின் ஏற்றுமதிக்கான எந்த ஆக்கப்பொருள்கள் தீர்வைத் தள்ளுபடிக்குத் தகுதி வாய்ந்தவை? (விடைக்கு 1 வரி போதுமானது)

(ஆ) ஆக்கப்பொருளொன்றுக்கான தள்ளுபடி வீதத்தைத் துணிபவர் யார்? (விடைக்கு 1 வரி போதுமானது)

(இ) தீர்வைத் தள்ளுபடியைத் துணியுமுன்பு கருத்திற் கொள்ளப்படும் தகவல்கள் யாவை? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(iv) ஏற்றுமதியாளர்களுக்குச் சலுகை அடிப்படையில் இடைத்தர, நெடுந்தவணைக் கொடுகடன்களை வழங்கும் **நான்கு** பிரதான நிலையங்களைப் பெயரிடுக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

**எதிர்பார்க்கப்படும் விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

வினா 4. (1) (அ) (1) செலாவணி உழைத்தல்.

(2) பற்றாக்குறையான பொருட்களை இறக்குமதி செய்தல்.

(3) தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல்.

(4) மேலதிக உற்பத்திகளை விற்பனை செய்தல்.

(5) உற்பத்திப்பொருளின் தரத்தைப் பராமரித்தல்.

(6) மற்ற நாடுகளுடன் தொடர்புகளை அபிவிருத்தி செய்தல்.

(3×1=3 புள்ளிகள்.)

(ஆ) (1) ஜவுளி/தைத்த ஆடைகள்.

(2) தேயிலை. (2×½ =1புள்ளி)

(11) (1) பொதியிடல் தொடர்பான வர்த்தக, தொழில் நுட்பத் தகவல்களை வசூலித்து, வழங்குதல்.

(2) பொதியிடல் தொடர்பான வாசிகசாலை வசதிகளை வழங்குதல்.

(3) தொழில் நுட்பத் தகவல் சுருக்க கோவைகள்.

(4) பொதியிடற் கிரயத்தைக் குறைத்தலுக்கான ஆராய்ச்சி.

(5) புதிய பொதியிடல் மூலப் பொருட்களை அறிமுகப்படுத்தல்

(6) பொருட்களின் நீண்ட காலப் பாவனைக்காக உற்பத்தி செய்தல், சமர்பித்தல் தொடர்பான தொழில் நுட்பங்களில் ஆலோசனை வழங்குதல்.

(7) களஞ்சியப்படுத்தல், விநியோகத் திட்டமிடல் தொடர்பாக ஆலோசனை வழங்குதல்.

(8) பொதியிடல் தொடர்பான பயிற்சி நெறிகளை நடாத்துவதில் உதவி செய்தல்.

(9) பொதியிடல் தொடர்பான பிரச்சினைகளை அரசுக்குச் சமர்ப்பித்தல்

(4×1 = 4 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(111) (அ) எல்லா பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளும் (அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாரம்பரியமற்ற பிரதான ஏற்றுமதிகளைக் குறிப்பிட்டாலும் புள்ளி வழங்குக) (1 புள்ளி)

(ஆ) ஏற்றுமதி வரித் தள்ளுபடிக் கூறு. (1 புள்ளி)

(இ) (1) கிரியக்கூற்று

(2) பொருட்களைக் கப்பல்வரை கையளிப்பதனால் உழைத்த இலாபம்.

(3) பயன்படுத்தப்பட்ட இறக்குமதி மூலப் பொருட்கள், அவற்றின் பெறுமதி செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வை.

(4) பொதியிடல் பொருட்கள். (2 1-2 புள்ளிகள்)

(ஆகக் குறைந்தது இரண்டு தகவல்கள் தரப்படல் வேண்டும்.)

(11/) (1) இலங்கை மத்திய வங்கி.

(2) தேசிய அபிவிருத்தி வங்கி.

(3) வரையறுக்கப்பட்ட மூலதன அபிவிருத்தி, முதலீட்டுக் கம்பனி.

(4) வரையறுக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

(4 1-4 புள்ளிகள்)

<u>விடையிறுத்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்.</u>

**இதுவும் அதிக பரீட்சார்த்திகளால் தெரிவு செய்யப்பட்ட வினாவாகும். எனினும் தேசிய பொதியிடல் மத்திய நிலையம் பற்றி அதிக மாணவர்களுக்கு எவ்வித அறிவும் இருக்கவில்லை. இதேபோல் இதில் (111)ம் பிரிவில் உப பிரிவுகளுக்கு எழுதப்பட்ட விடைகளும் திருப்தியற்றவையாகக் காணப்பட்டன.**

<u>5ம் வினா.</u>

5. (i) (அ) பின்வரும் நிலைமைகளுக்கு மிகப்பொருத்தமான தொடர்பாடல் முறை யாது?

(1) ஒரு தொழிற்சாலையின் அனைத்திடமும் பரந்துள்ள வேலையாளர்களுக்கு அவ்வப்பொழுது உடனடியாகச் செய்திகளை வழங்குவதற்கு (விடைக்கு 1 வரி போதுமானது)

(2) தற்போதுள்ள ஊழியர் ஒருவரைப் பதவியுயர்த்துவதன் மூலம், முகாமை நிரப்புவதற்கு விரும்பும் ஒரு வெற்றிடம் பற்றி ஊழியர்களுக்கு அறிவிப்பதற்கு

(விடைக்கு 1 வரி போதுமானது)

(ஆ) பத்திரிகைகள் (புதினத்தாள்) மூலம் வரையறுத்த பொதுக் கம்பனியொன்று பொது மக்களுக்கு வழங்கக்கூடிய நான்கு வகையான செய்திகளைக் குறிப்பிடுக.
(விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ii) ஓர் உற்பத்தியாளரால் மேற் கொள்ளப்படும் களஞ்சியத்திட்டமிடுகை எங்ஙனம் ஒரு சில்லறை விற்பனையாளரால் மேற் கொள்ளப்படும் களஞ்சியத்திட்டமிடுகையிலிருந்து வேறுபடும்?
(விடைக்கு 6 வரிகள் போதுமானது)

(iii) பின்வருவனவற்றின் கருத்தையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் விளக்குக.

(1) உச்சக் கையிருப்பு மட்டம் (2) முதன்மைக் காலம் (lead time)
(விடைக்கு 6 வரிகள் போதுமானது)

(iv) (அ) கையிருப்பற்ற நிலையிலான செலவு (Stock-out cost) என்பதால் கருதப்படுவது யாது?
(விடைக்கு 1 வரி போதுமானது)

(ஆ) அது உற்பத்தியாளர் ஒருவரை எங்ஙனம் பாதிக்கும்? (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

<u>எதிர்பார்க்கப்படும் விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்</u>

வினா 5 (1)(அ)(1) ஒலிபெருக்கி. (1 புள்ளி)

(2) அறிவித்தல் பலகை/சுற்றறிக்கை. (1 புள்ளி)

(ஆ)(1) பங்குகள், தொகுதிக்கடன் வழங்கல்.

(2) முகவர் நியமனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23288

(3) பொருட்களை விற்பதற்கான விளம்பரம்.

(4) விலை மாற்றம் அல்லது மீட்டல்.

(5) விலாசம், தொலை பேசி இலக்கம் ஆகியவற்றில் மாற்றம்.

(6) தொழிலாளர் நியமனம்.

(7) பங்குதாரர்கட்கும், தொகுதிக்கடன்தாரர்கட்கும் அறிவித்தல்கள்.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆகக் குறைந்தது நான்கு வகையான செய்திகள் எதிர்பார்க்கப் படுகின்றன)

(11) (1) உற்பத்தியாளருடைய களஞ்சியத்திருக்கையானது ஒரு சில வகை மூலப் பொருட்களையும், ஒருசில வகை முடிவுப் பொருட்களையும் உள்ளடக்கும். சில்லறை வியாபாரிகளைப் பொறுத்தவரையில், அவர் வியாபாரம் செய்யும் பல்வேறுவகைப் பொருட்களையும் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(2) உற்பத்தியாளரைப் பொறுத்தவரையில், உற்பத்தியில் தடங்கல் ஏற்படாதவாறு போதியளவு மூலப் பொருட்களைக் களஞ்சியத்தில் வைத்திருத்தல் வேண்டும். சில்லறை வியாபாரியைப் பொறுத்த வரையில் உற்பத்தித் தடங்கல் ஏற்படுவதில்லை.

(3) உற்பத்தியாளர் பெருமளவில் கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்துவார், சில்லறை வியாபாரி சிறு அளவில் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவார்.

(4) விலைகுறைவான பருவகாலங்களில் உற்பத்தியாளர் பெருமளவு மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவார். சில்லறை வியாபாரி பெருமளவு கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்துவதில்லை. ($2 \times 2 = 4$ புள்ளிகள்)

(இரண்டுவகை வேறுபாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன)

(111) (1) <u>கருத்து</u>

ஒரு குறிப்பிட்ட சுழற்சிக் காலத்தினுள் வைத்திருக்கப்பட வேண்டிய ஆகக் கூடிய மட்ட இருப்பினைக் குறிக்கின்றது. (1 புள்ளி)

<u>முக்கியத்துவம்.</u>

உச்ச இருப்பு மட்டத்தினைப் பேணிக் கொள்ளல் சரக்கிருப்புக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய கிரயங்களை இழிவுப்படுத்த உதவுகின்றது.

(1 புள்ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) கருத்து.

பொருட்களைக் கட்டளையிடுவதற்கும், பெற்றுக்கொள்வதற்கும் இடையிலான நியம காலம்/நேரம். (1 புள்ளி)

முக்கியத்துவம்.

பொருட்கள் பற்றாக்குறையைத் தவிர்க்குமுகமாக சரியான நேரத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு இது முக்கியமானது. (1 புள்ளி)

(1V) (அ) திடீரென/எதிர்பாராமல் பொருட் பற்றாக்குறையின் விளைவாக ஏற்படுகின்ற நட்டங்கள். (1 புள்ளி)

(ஆ)(1) நன்மதிப்பில் வீழ்ச்சி ஏற்படுதல்.

2. கிரயங்களை அதிகரித்தல்.

(3) நட்டங்களை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள்.

(1×3=3 புள்ளிகள்)

(மூன்று பாதிப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன)

விடையிறுத்தல் சம்பந்தமாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்:

இது பலரால் தெரிவுசெய்யப்பட்ட வினாவாகும். எனினும் சரக்கிருப்புக் கட்டுப்பாடு சம்பந்தமாக வினவப்பட்டு இருந்த (111), (1V)ம் பிரிவுகளுக்கு எழுதப்பட்டிருந்த விடைகள் திருப்தியற்றவையாக காணப்பட்டன.

6ம் வினா.

6. (i) (அ) சந்தைபபடுத்தல ஆராயசசி என்பதால் விளங்கிக் கொள்ளபபடுவது யாதென விளக்குக. (விடைககு 2 வரிகள் போதுமானது)

(ஆ) தொழில் முயற்சியாளர் (வியாபாரி) ஒருவருக்குச் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி ஏன் முக்கியமானது? (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ii) (அ) சோதனைச் சந்தைப்படுத்தல் எனபபடுவது யாது? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) அது எய்தும் நோக்கங்கள் யாவை? (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(iii) (அ) பின்வருவனவற்றுல் யாது கருதபபடும்?

(1) கடையிலுள்ள பண்டங்கள்

(2) தனிச்சிறப்பு வாய்ந்த பண்டங்கள்

(3) நாடப்பெறுத பண்டங்கள் (விடைக்கு 7 வரிகள் போதுமானது)

(ஆ) இவற்றுள் எவ்வகைப் பண்டங்களுக்குப் பெருமளவு மேம்படுத்தல் அவசியமாகும்? (விடைக்கு 1 வரி போதுமானது)

(iv) (அ) மேம்படுத்தலுக்கும் (விருத்தி செய்தல்) விற்பனைகளை மேம்படுத்தலுக்குமிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) விற்பனை மேம்படுத்தலின் நான்கு வகைகளை எடுத்துரைக்க. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

எதிர்ப் பார்க்கப்படும் விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.

வினு 06 (1)(அ) சந்தைப்படுத்தல் ஆராய்ச்சியானது, பொருட்கள் சேவைகளைச் சந்தைப்படுத்துவதுடன் தொடர்புடைய சகல காரியங்களையும் அல்லது நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றது. எனவே விளம்பரம் படுத்தலின் திறமையினை ஆய்வு செய்தல், விநியோக மார்க்கங்களை ஆய்வு செய்தல், போட்டி உற்பத்திகளை ஆய்வு செய்தல் சந்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தற் கொள்கைகளை ஆய்வு செய்தல், வேறு நுகர்வோர் நடத்தைப் பற்றிய எல்லா அம்சங்களையும் சீர்படுத்தும் ஆய்வு செய்தல் போன்றவற்றை சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி உள்ளடக்கு கின்றது. (1 புள்ளி)

(ஆ) (1) ஒரு உற்பத்தி பொருளின் வடிவம், தரம் நிறம் என்பனவற்றை மாற்றுவதற்கு.

(2) வினியோக மார்க்கங்களை மாற்றுவதற்கு.

(3) விளம்பர ஊடகத்தை மாற்றுவதற்கு.

(4) சந்தையை மாற்றுவதற்கு.

(5) விலை போன்றவற்றை மாற்றுவதற்கு (3×1=3புள்ளிகள்)

(3 முக்கியத்துவங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன)

(11)(அ) நுகர்வோருடைய பிரதிபலிப்பைக் கண்டறிவதற்காக, ஒரு குறிப்பிட்ட உற்பத்தியில் சிறு அளவில் உற்பத்தி செய்து, வரையறுக்கப்பட்ட சந்தைக்கு அவற்றை விடுதல். (2புள்ளிகள்)

(ஆ) (1) உற்பத்தியை நுகர்வோர் ஏற்றுக்கொள்கின்றனரா என அறிதல்.

(2) உற்பத்தி மேலும் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டுமா, உற்பத்தியில் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டுமா போன்ற தொழில் நுட்ப அம்சங்களை அறிந்து கொள்ளல். (2×1=2புள்ளி)

(இரண்டு நோக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.)

(111)(அ) (1) கடையிலுள்ள பண்டங்கள்-போட்டிப் பொருட்கள் குறிப்பிட்ட பொருளை ஒப்பிட்டு பார்ப்பதற்கு நேரம், முயற்சி என்பன வற்றைப் பிரயோகிப்பது பெறுமதியானது என நுகர்வோர் உணரும் பொருட்கள். உ.வீ, ரேடியோ. (1 புள்ளி)

(2) <u>தனிச்சிறப்பு வாய்ந்த பண்டங்கள்</u> - நுகர்வோருக்கு உண்மையில் தேவைப்படுவது மட்டுமல்ல, அதைக் கொள்வனவு செய்வதற்கு நுகர்வோர் விஷேட முயற்சிகளை எடுக்கக்கூடிய பண்டங்கள். தனிச் சிறப்பு வாய்ந்த பொருட்களைக் கொள்வனவு செய்தல், போட்டி பொருட்களுடன் ஒப்பீடு செய்தலை குறிக்காது. பொதுவாகத் தனிச் சிறப்புப் பண்டங்கள் விஷேட குறியுள்ள பொருட்களாகும் - பரந்த உற்பத்திப் பொருள் வகையல்ல. (புள்ளி - 1)

(3) <u>நாடப்பெறா பண்டங்கள்</u> எனப்படுவன நுகர்வோருக்கு இன்னும் தேவைப்படாமல் இருப்பதுடன், அவற்றை வாங்கலாம் என்றுகூட நுகர்வோருக்கு தெரியாத பொருட்கள். இதனால் நுகர்வோர் இப்பொருட்களைத் தேடி அலைவதில்லை. மேம்படுத்தல் நடவடிக்கைகள், இப்பொருட்கள் பெறுமதியானவை என உரைச் செய்தாலே இவ்வகைப் பொருட்களைக் கொள்வனவு செய்வார். (1 புள்ளி)

(ஆ) நாடப்பெறா பண்டங்கள். (1 புள்ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1V) (அ) <u>மேம்படுத்தலானது.</u> விளம்பரப்படுத்தல், நேரடி விற்பனை, பகிரங்கப் படுத்தல், விற்பனை மேம்படுத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

<u>விற்பனை மேம்படுத்தலானது</u> நேரடி விற்பனை, பகிரங்கப்படுத்தல், விளம்பரப்படுத்தல் என்பவை தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளைக் குறிக்கின்றது. (2 புள்ளிகள்)

(வேறுபாட்டைக் காட்டினால் மட்டும்)

(ஆ) (1) மாதிரி கொடுத்தல், (2) வெகுமதிகள்/பரிசுகள்
(3) கூப்பன்கள், (4) பொருட்காட்சிகள், (5) போட்டி.
(6) விற்பனை, (7) செய்கை மாதிரி விளக்கம் போன்றன.

( 4×½=2 புள்ளிகள். )

(ஆகக் குறைந்தது நான்கு வகைகள்)

<u>விடையிறுத்தல் சம்பந்தமானக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்.</u>

**இது அவ்வளவு பிரபல்யமான வினாவல்ல. அதேபோல் எழுதப்பட்ட விடைகளு ம் குறிப்பாக (11) ம் (111)ம் பிரிவுகளுக்கு எழுதப்பட்ட விடைகள் மிகவும் திருப்தியற்றவையாக இருந்தன.**

<u>7ம் வினா.</u>

7. (i) (அ) கட்டில்லாத (சுங்கமற்ற) துறைமுகமாவது யாது? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) கட்டில்லாத் துறைமுகமொன்று எங்ஙனம் சுதந்திர வர்த்தக வலயமொன்றிலிருந்து வேறுபடும்?
(விடைக்கு 6 வரிகள் போதுமானது)

(ii) இலங்கையர் ஒருவர் தொழிலொன்றை முடித்துக்கொண்டு வெளிநாட்டிலிருந்து திரும்புகிறார் என ஊகித்துப் பின்வருவனவற்றுக்கு விடை தருக.

(அ) தீர்வையற்ற கடைத் தொகுதியிலிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்தற் பொருட்டு அவருக்கு அனுமதிக்கப்படும் தீர்வையற்ற கழிவுத் தொகையைத் துணிவதில் சுங்க அதிகாரிகளால் கருத்திற்கொள்ளப்படும் காரணிகள் யாவை?
(விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) தீர்வையற்ற பொருள்களுக்கான கொடுப்பனவு முறை தொடர்பில் விதிக்கப்படும் நிபந்தனை யாது?
(விடைக்கு 1 வரி போதுமானது)

(iii) (அ) முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலிருந்து இலங்கை இதுவரை அடைந்துள்ள **நான்கு** பொருளாதாரப் பயன்களைச் சுருக்கமாக விளக்குக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) வேலையாளர் – முகாமை சார் விவாத விடயங்களைத் தீர்ப்பதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் கிடைக்கத்தக்கதாயுள்ள பொறிமுறை யாது? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(iv) வர்த்தக கப்பற்றுறை அமைச்சின் வர்த்தக, கப்பற்றுறைச் செய்திச் சேவையின் **நான்கு** தொழிற்பாடுகளை விளக்குக. (விடைக்கு 6 வரிகள் போதுமானது)

<u>எதிர்ப்பார்க்கப்படும் விடைகளும் புள்ளி விபரங்களும்.</u>

வினா 7. (1) (அ) வரியின்றி (தீர்வையின்றி) பொருட்கள் ஏற்றியிறக்கும் துறைமுகம்.

( 1 புள்ளி)

(ஆ) (1) தீர்வையின்றி பொருட்களை ஏற்றியிறக்கும் துறைமுகம் கட்டில்லாத் துறைமுகமாக இருக்கையில், தீர்வையின்றி உற்பத்திசெய்து விற்குமிடம் சுதந்திர வர்த்தக வலயமாகும். இது ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பைக் கொண்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) கட்டில்லாத்துறைமுகமொன்றின் நலன்கள் அத்துறைமுகத்தினூடாக ஏற்றுமதிஇ இறக்குமதி செய்பவர்களால் மட்டுமே அநுபவிக்கப் படுகின்றன. சுதந்திர வர்த்தக வலயமொன்றின் நலன்கள் உற்பத்தியாளர்கள், வலயத்திலுள்ள பொருட்களை வாங்குகின்ற மக்கள், விநியோகஸ்தர்கள் ஆகியோரால் அநுபவிக்கப்படுகின்றன.

(3) கட்டில்லா துறைமுகம் இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரத்தை மட்டுமே ஊக்குவிக்கின்றது, ஆனால் சு. வ. வ.மானது உற்பத்திகளை மட்டுமல்ல, எல்லா வியாபார நடவடிக்கைகளையும் ஊக்குவிக்கின்றது.

(4) சு. கூ. கூ. இன் காரணமாக, வெளிநாட்டு முதலீடும், தொழில் நுட்ப அறிவும் நாட்டிற்குள் வருகின்றன. கட்டில்லா துறை இந்த நலனைத் தருவதில்லை. (3×1 = 3 புள்ளிகள்)

(11) (மூன்று வேறுபாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன)

(11)(அ)(1) வெளிநாடுகளில் தங்கியிருந்த காலம்.

(2) முன்னர் கொண்டுவரப்பட்ட பொருட்களின் பெறுமதியீது விதிக்கப்பட்ட வரி/தீர்வை, (2×1½=3 புள்ளிகள்)

(இரண்டு காரணிகள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன)

(ஆ) பிரயாணிகள் காசோலை மூலம் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். (1 புள்ளி)

(111)(அ)(1) வெளிநாட்டுச் செலாவணி உழைத்தமை.

(2) வெளி மூலதனம் உட்பாய்ந்தமை.

(3) வேலை வாய்ப்பு அதிகரித்தமை.

(4) தொழில்நுட்ப அறிவு அபிவிருத்தியடைந்தமை.

(5) வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல் தவிர்க்கப்பட்டமை. (4×½ = 2 புள்ளிகள்)

(ஆ) தொழிலாளர்களில் இருந்தும், தொழில் கொடுப்போர்களிலிருந்தும் சம அளவான பிரதிநிதிகளைக் கொண்டமைந்த "கூட்டு ஆலோசனைக் குழுக்கள் - இவை பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் இயங்குகின்றன. (2 புள்ளிகள்)

(11/) (1) வியாபாரிகட்காக ஒரு வாசிகசாலையை நடாத்தல்.

(2) ஏற்றுமதியாளர்கட்கும், வெளிநாட்டு இறக்குமதியாளர்கட்கும் ஆலோசனை சேவைகளை வழங்கல்.

(3) உள்நாட்டு ஏற்றுமதியாளர்கட்கு சந்தைத் தகவல்களை வழங்குதல்.

(4) வெளியீடுகள் ஊடாக வெளிநாட்டு இறக்குமதியாளர்கட்கு உள்நாட்டு வியாபார வாய்ப்புக்களை வழங்குதல்.

(5) ஏற்றுமதி நடவடிக்கைகள் தொடர்பாக வீடியோ படங்களைத் தயாரித்தல்.

(6) வியாபாரிகட்கு டெலெக்ஸ் வசதிகளை வழங்குதல். (4 புள்ளிகள்)

2 புள்ளிகள் 4 தொழிற்பாடுகளைக் குறிப்பிட

2 புள்ளிகள் 4 தொழிற்பாடுகளை விளக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடையிறுத்தல் சம்பந்தமாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்.**

இதுவும் மிகக் குறைந்தளவு பரீட்சார்த்திகளால் தெரிவு செய்யப்பட்ட வினாவாகும். இவ்வாறே பலர் மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற வினாவாகும். இது விசேடமாக நடைமுறை விடயங்கள் பற்றிய வினாவாக அமைவதோடு, இதில் (11)ம், (111) ஆ, (1/)ம் பிரிவுகட்கு எழுதப்பட்ட விடைகள் மிகவும் திருப்திகரமற்றவையாக அமைந்தன.

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11ம் வினாப் பத்திரம்.

### 1ம் வினா.

1. (i) தற்காலப் பணத்துக்கும் கடந்த காலத்தில் உபயோகிக்கப்பட்ட பணத்துக்கும் இடையிலான இரு பிரதான வேறுபாடுகளைக் கூறுக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ii) பணத்தின் நிரம்பலைத் துணியும் மூன்று காரணிகளைக் கூறுக.
(விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(iii) கைமாறத்தக்க (பரிமாற்றத்தக்க) சாதனம் ஒன்றின் இரு சிறப்பியல்புகளை விளக்குக.
(விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(iv) (அ) நாணய மாற்றுண்டியல் ஒன்றின் நான்கு பிரதான சிறப்பியல்புகளை எழுதுக.
(விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) உண்டியலொன்றை வரைதலுக்கும் உண்டியலொன்றுக்குப் புறக்குறிப்பிடுதலுக்குமிடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக. (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(v) (அ) பொதுக் குறுக்குக் கோடிடலுக்கும் சிறப்புக் குறுக்குக் கோடிடலுக்குமிடையிலான பிரதான வேறுபாடு யாது? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) குறுக்குக் கோடிடலில் "கைமாறத் தகாதது" எனும் சொற்களை எழுதுவதன் நோக்கம் யாது?
(விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(இ) ஒரு வங்கியிலே நடைமுறைக் கணக்கை வைத்திருக்காத ஒருவர் 'பெறுவோன் கணக்கிற்கு மட்டும்' எனும் குறிப்பினைக் கொண்ட குறுக்குக் கோடிட்ட காசோலையொன்றைப் பெற்றுக் கொள்கிறார். கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு அவருக்குக் கிடைக்கத்தக்கதாயுள்ள மிகச் சிறந்த செயல் நெறி யாது? (விடைக்கு 1 வரி போதுமானது)

(vi) (அ) முன்னைய காசோலைகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கைத் தன்னியக்கத் தீர்வு நிலையம் ஆரம்பிக்கப்பட்டதுடன் பயன்பாட்டுக்கு வந்துள்ள புதிய காசோலைகளில், சேர்க்கப்பட்டுள்ள சிறப்பான அம்சங்கள் எவை? (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) காசோலைகளைத் தீர்வுசெய்யும் புதிய முறைமையின் இரு அனுகூலங்களைக் கூறுக.
(விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(vii) ஒரு வர்த்தக வங்கிக்கும் ஒரு நிதிக் கம்பனிக்குமிடையிலான இரு பிரதான வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக. (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(viii) சில நிதிக் கம்பனிகள் அவற்றின் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுமிடத்து பணவைப்புச் செய்வோர்களின் நலன்களைப் பேணுவதற்கு, அண்மைக் காலத்தில் மத்திய வங்கியினால் எடுக்கப்பட்டு வரும் மூன்று நடவடிக்கைகளைக் கூறுக. (விடைக்கு மூன்று வரிகள் போதுமானது)

(ix) (அ) அரசாங்க வங்கியாளராக உள்ள மத்திய வங்கியின் இரு தொழிற்பாடுகளைக் கூறுக.
(விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) மத்திய வங்கியினால் தாபிக்கப்பட்டுள்ள ஏற்றுமதிக் கொடுகடன் ஆலோசனைப் பிரிவின் கடமைகளை நீர் சுருக்கமாக விளக்குக. (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(x) (அ) முதலாந்தரப் பங்குச் சந்தைக்கும் இரண்டாந்தரப் பங்குச் சந்தைக்குமிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக. (விடைக்கு 6 வரிகள் போதுமானது)

(ஆ) கொழும்புப் பிணைகள் பரிவர்த்தனை நிலையத்தின் "தீர்வுத் திகதிகள்" எவை?
(விடைக்கு 1 வரி போதுமானது)

(xi) (அ) காசோட்டம் என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)
(ஆ) அது வியாபாரி ஒருவருக்கு ஏன் முக்கியமானது? (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(xii) (அ) நடைமுறைக் கணக்கொன்றுக்கும் நிலையான வைப்புக் கணக்கொன்றுக்கும் இடையிலான இரு வேறுபாடுகளைக் கூறுக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) அண்மையில், குறித்தவொரு வர்த்தக வங்கி, சேமிப்புக் கணக்குக்குச், சாதாரண சேமிப்புக் கணக்குகளில் வழங்கப்படாத குறித்த சில மேலதிக நன்மைகளை அறிமுகப்படுத்தியது. இந்த நன்மைகள் யாவை? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

### எதிர்பார்க்கப்படும் விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.

(1) (1) தற்காலப் பணம் பிரதானமாக (தாள் நாணயங்கள்) நோட்டுக்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலப் பணம் பிரதானமாக நாணயங்களாகும். எவை பொருட்களாகும்.

(2) தற்காலப் பணத்திற்கு பொது ஏற்றுக்கொள்ளும் தன்மை முக்கியமானது. கடந்த காலப் பணத்திற்கு உட்பெறுமதி முக்கியமானது

(3) தற்காலத்தில் வங்கிகள் பண வழங்கலில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. கடந்த காலத்தில் பெருமளவு அரசாங்கமே செல்வாக்குச் செலுத்தியது (குறைந்தது இரண்டு வேறுபாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.) ($2\times1\frac{1}{2}$ = 3 புள்ளிகள்)

(4) தற்காலப் பணம் இலகுவாகப்பிரிபடக்கூடியது.

(11)(1) வங்கி முறையினால் உரிமையாகக் கொள்ளப்பட்டுள்ள தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்.

(2) வர்த்தக வங்கிகளிடம் இருந்து அரசினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள்.

(3) வர்த்தக வங்கிகளிடமிருந்து தனியார் துறை பெற்றுக்கொண்ட கடன்கள்.

(4) வங்கிமுறையின் தேறிய பணரீதியற்ற பொறுப்புக்கள்.

(5) மத்திய வங்கியால் வாங்கிய திறைசேரி சொத்துக்கள் அல்லது உள்நூர் சொத்துக்கள்.

(6) வர்த்தக வங்கியால் உருவாக்கப்பட்ட கடன்கள் அல்லது திரவச் செலவு.

($3\times1=3$ புள்ளிகள்)

(111)(1) இலகுவாக கைமாற்றத்தக்கது (வழங்கப்பட்ட மாத்திரத்திலேயே கைமாற்றப்படக்கூடியது)

(2) கைமாற்றப் பெறுபவர் (சட்டத்தாற் கூட உறுதிப்படுத்தப்படக் கூடிய) பூரணமானதுமான உரிமையைப் பெறுகிறார்.

(3) கைமாற்றியவரிடமிருந்து கொடுப்பனவைப் பெறுவதற்கு கைமாற்றப் பெற்றவர் சட்ட நடவடிக்கை எடுக்கும் உரிமையைப் பெறுகின்றார்.

($2\times1\frac{1}{2}=3$ புள்ளிகள்.)

(1V)(அ)(1) அது ஒரு கட்டளையாக இருத்தல்.

(2) கட்டளை நிபந்தனையற்றதாக இருத்தல்.

(3) அது எழுதப்பட்டிருத்தல்.

(4) கட்டளையானது ஒருவரால் இன்னொருவருக்கு விலாசமிடப்பட்டிருத்தல்.

(5) கட்டளையிடுகின்ற நபரால் ஒப்பமிடப்பட்டிருத்தல்.

(6) கோரப்படும்போது அல்லது முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு எதிர்காலத் திகதியில் செலுத்தப்படல்.

(7) பணத்தொகை குறிப்பிட்டு இருத்தல்.

(8) பணம் செலுத்தப்படவேண்டிய கட்சியினர் யார் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல். ($4\times\frac{1}{2}=2$ புள்ளிகள்.)

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) (1) எதிரலில் ஒரு நபர் உண்டியலின் முற்பக்கத்தில் ஒப்பமிட்டு, அதில் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்துவதற்கு இணங்குகின்றார். புறக்குறிப்பிடுதலில் ஒரு நபர் அல்லது காவி உண்டியலின் பின்புறத்தில் ஒப்பமிட்டு அல்லது பெயரை எழுதி அதை வேறு நபருக்கு மாற்றுகின்றார்.

(2) கொடுப்பனவைப் பொறுத்தவரையில் இடம், நேரம், முதலியன தொடர்பாக எதிர்போர் நிபந்தனைகளைக் குறிப்பிட முடியும். புறக் குறிப்பிடுதலில் இது நடைபெறுவதில்லை. ஆனால் புறக் குறிப்பிடுதலுடன், கொடுப்பனவு செய்யப்படுவோர் தொடர்பாக சில நிபந்தனைகள் குறிப்பிடப்பட முடியும். (ஒரு வேறுபாடு எதிர் பார்க்கப்படுகின்றது) (1 புள்ளி)

(IV) (அ) பொதுக் குறுக்குக் கோடுகளுக்கிடையில் வங்கியின் பெயர் காணப்படமாட்டாது. சிறப்புக்குறுக்குக் கோடுகளுக்கிடையில் வங்கியின் பெயர் காணப்படும். (1 புள்ளி)

(ஆ) கைமாற்றுபவருக்கு காசோலை மீது உரிமை இருக்கின்றது என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள எந்தவொரு கைமாற்றப்படுவோருக்கும் வழங்கப்படுகின்ற ஒரு எச்சரிக்கையாகும். (1 புள்ளி)

(இ) காசோலையை வரைந்தவரிடம் "பெறுவோர் கணக்கு மட்டும்" என்ற குறுக்குக் கோட்டினை ரத்து செய்யக்கோருதல்.

அல்லது.

குறுக்குக் கோடுகளுக்கிடையில் காணப்படும் "பெறுவோர் கணக்கு மட்டும்" என்ற குறிப்பினை மட்டும் ரத்து செய்யக் கோருதல்.

அல்லது;

புதியதொரு காசோலையை "பெறுவோர் கணக்கு மட்டும்" என்ற குறிப்பின்றி எழுதக் கோருதல்.

(ஏதாவது ஒன்றை எழுதினாற் போதும்) (1 புள்ளி)

(VI) (அ) (1) தன்னியக்க காசோலை மாற்றுக் கோடு – இக்கோட்டின் கீழ் உள்ள இலக்கங்கள் கணனியினால் வாசிக்கப்பட முடியும்.

(2) இவ் இலக்கங்கள் காசோலை இலக்கம், கிளை இலக்கம், சிலவேளை கணக்கு இலக்கம் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

(3) நியம அளவு/பருமன் – இரண்டு பருமன்கள் மட்டும்.

(இரண்டு அம்சங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன) (2×½=1 புள்ளி)

(ஆ) (1) விரைவான தீர்வு.

(2) வகைப்படுத்தலில் ஏற்படும் மனித தவறுகளை இழிவுபடுத்தல்.

(3) வங்கிகட்கு மிகவும் கருத்துள்ள தரவுகள் வழங்கப்படலாம்.

(4) வங்கிகட்கும், அவற்றின் கிளைகட்கும் மிகவும் கருத்துள்ள பரிசோதனைகள் அல்லது கணக்காய்வுகள் வழங்கப்படலாம். (2×1=2 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(VII) (1) வர்த்தக வங்கிகள் நடைமுறைக்கணக்குகளைப் பேணல்; நிதிக் கம்பனிகள் நடைமுறைக் கணக்குகளைப் பேணுவதில்லை. (வர்த்தக வங்கிகள் காசோலைகளை வழங்குகின்றன; நிதிக்கம்பனிகள் காசோலைகளை வழங்குவதில்லை.)

(2) வர்த்தக வங்கிகள் பணத்தை உருவாக்குகின்றன; நிதிக்கம்பனிகள் அவ்வாறு செய்வதில்லை.

(3) வர்த்தக வங்கிகள், மத்திய வங்கியுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளன. மத்திய வங்கியின் சில கொள்கைகள் வ. வங்கிகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நிதிக்கம்பனிகள் மத்திய வங்கியுடன் தொடர்பை வைத்துள்ளன.

(4) வ. வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. நி. கம்பனிகள் ஈடுபடுவதில்லை (2×1½=3 புள்ளிகள்)

(VIII) (1) ஆகக் கூடிய வட்டி வீதத்தை நிர்ணயித்தல்.

(2) முன்பதை விட அதிகமான அறிக்கைகளைக் கோரல்

(3) திடீர்ப்பரிசோதனைகளை நடத்தல்.

(4) கலைப்பதற்கு சட்ட நடவடிக்கை எடுத்தல்.

(5) அவசரகால சட்ட விதிகளின்கீழ் கையேற்றலும், புதிய முகாமையை நியமித்தலும். (3×1=3 புள்ளிகள்)

(IX) (அ) (1) அரசாங்கக் கணக்குகளை வைத்தல்.

(2) அரசாங்கத்துக்கு நிதி வழங்குதலில் உதவல்.

(3) அரச நிதி முகவராக இயங்குதல்.

(4) சர்வதேச நிறுவனங்களில் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.

(5) பணம் அச்சிடுதல். (2×½=1 புள்ளி)

(ஆ) (1) ஏற்றுமதியாளர்கட்கும், வர்த்தக வங்கிகட்கும், ஏற்றுமதி நடவடிக்கைகளில் அபிவிருத்தியைப் பாதிக்கக்கூடிய சந்தை நிபந்தனைகள், வெளிநாட்டுச்செலாவணிப் பிரச்சனைகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.

(2) ஏற்றுமதி கடன் திட்டத்தைத் தயாரித்தல்.

(3) ஏற்றுமதி கடன் திட்டம் போன்றவற்றைத் திறமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல். (இரண்டு கடமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன) (2×1=2 புள்ளிகள்)

(X) (அ) பத்திரிகைகள் மூலம் அல்லது முன் விவரணத்தின் மூலம் விளம்பரப்படுத்துவதன் மூலம் கம்பனிகள் பங்குகளை வழங்கும்போது ஏற்படுகின்ற சந்தை முதலாந்தரப் பங்குச் சந்தை எனப்படும். வழமையாக இப்பங்குகள் முகவிலையில் வழங்கப்படுவதுடன், தரகு வழங்கப்படுவதில்லை.

தரகர்கள் மூலம் பங்குச்சந்தையில், முதலாந்தரச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளை விற்கும்போது இரண்டாந்தரப் பங்குச் சந்தை உருவாகின்றது. கேள்வி நிரம்பலால் விலை தீர்மானிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ங்கு நாகு வழங்கப்படல் வேண்டும்.
(முறையாக விடையளிக்கப்பட்டிருந்தால் மட்டும் 2 புள்ளிகள் இல்லாவிடின் 1 புள்ளி) (2 புள்ளிகள்)

(ஆ) கொள்வனவாளர்-மாதத்தின் 2ம், 4ம் புதன்கிழமைகள் விற்பனையாளர் மாதத்தின் 2ம், 4ம் வெள்ளிக்கிழமைகள். (1 புள்ளி)

(XI) (அ) வியாபார நடவடிக்கைகளைக் கையேற்பதன் விளைவாக ஒரு நிறுவனம் செலுத்துகின்ற பணம் (வெளிப் பாய்ச்சல்) அல்லது பெறுகின்ற பணம் (உட்பாய்ச்சல்) காசோட்டமாகும். (1 புள்ளி)

(ஆ) (1) சமப்பாட்டு காசோட்டம் ஒன்றைப் பேணுதல் வலிமையானதொரு திரவ நிலையைப் பேண உதவும். (தொழிற்படு மூலதனத் தேவையை இலகுவாக நிறைவு செய்யும்)

(2) குறுங்கால நிதித்திட்டமிடல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட முடியும். மிகையான பணம் காணப்படுகையில் முதலீட்டு மார்க்கங்களைக் கண்டறிவதற்கும், நிதிப் பற்றாக்குறை காணப்படுகையில், நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளைத் தேடுவதற்கும் உதவும்.

(3) சமப்பாட்டு காசோட்டமொன்றைப் பேணுதல் ஒரு நிறுவனத்தின் மூலதனக்கிரயத்தைக் குறைக்க உதவும். (இரண்டு முக்கியத்துவங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன) (2×1=2 புள்ளிகள்)

(XII) (அ) (1) ந. க. கணக்கில் காசோலை பயன்படுத்தப்பட முடியும் நி. வை. கணக்கில் முடியாது.

(2) பொதுவாக ந. க. மீதிக்கு வட்டி வழங்கப்படுவதில்லை. ஆனால் நி. வை. கணக்கு மீதிக்கு வட்டி செலுத்தப்படும்.

(3) ந. க. மீதியில் இருந்து எந்நேரமும் பணம் மீளப்பெறப்பட முடியும், ஆனால் நி. வை. மீதியில் இருந்து பணம் மீளப்பெற முன்னறிவித்தல் தேவை.

(4) ந. க. வைத்திருப்போருக்கு மாதாந்த வங்கிக் கூற்று அனுப்பப்படும் நி. வை க/கு வைத்திருப்போருக்கு அனுப்பப்படுவதில்லை.

(5) ந. க. இல் பணத்தை எந்நேரமும் வைப்பிலிடுவது சாத்தியமானது. நி. க. இல் சாத்தியமில்லை.

(ஆ) (1) மூன்றாம் நபருக்குச் செலுத்துவதற்கு காசோலைகளைப் பாவித்தல்.

(2) நாளாந்த மீதிகள் மீது வட்டி கணிப்பீடு.

(3) சேமிப்பு வைப்பு புத்தகத்தைப் பயன்படுத்தி கணக்கு வைத்திருப்பவர் பணம் மீளப்பெறுதல். (இரண்டு நன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றன)

(2×1=2 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடையளித்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்.**

இது ஒரு கட்டாய வினாவாகும். இதில் (1V) பிரிவில் வினவப்பட்ட நாணய மாற்றுக் கடியின் பிரதான நிரப்பியல்புகள் பற்றி மிகவும் குறைவானவர்களே அறிந்திருந்தனர். அவ்வாறே (V)(இ) பிரிவிற்கும் பலர் அளித்த விடை பொருத்தமற்றதாக இருந்தது. இங்கு (V111) பிரிவில் கேட்கப்பட்ட வினாவுக்கும் பலர் சரியான விடையை வழங்கியிருக்கவில்லை. மேலும் (ix)(இ), (x)(இ), (xi)(இ) பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டு இருந்த விடைகளும் பெருமளவில் திருப்தியற்றவைகளாகவே காணப்பட்டன.

**2ம் வினா.**

2. (i) இலங்கை மத்திய கேள்வுப் பணியகத்தின் நான்கு நோக்கங்களைச் சுருக்கமாக விளக்குக.
(விடைக்கு நான்கு வரிகள் போதுமானது)

(ii) இலங்கையில் வீதிப் போக்குவரத்து தொடர்பில் மோட்டார் வாகனப் பதிவாளரின் நான்கு கடமைகளைக் கூறுக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(iii) (அ) எண்ணெய்க் கப்பல்கள், கொள்கலக் கப்பல்கள் என்பவற்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
(விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) எண்ணெய்க் கப்பல்களின் இரு அனுகூலங்களை விளக்குக.
(விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(iv) (அ) அண்மைக்காலத்தில் பல வெளிநாட்டு விமானச் சேவைகள் இலங்கைக்கான தமது பறப்புகளை இடைநிறுத்திக் கொண்டன. அத்தகைய இரு விமானச் சேவைகளைப் பெயரிட்டு, பறப்புகளை இடைநிறுத்தத்துக்கான காரணத்தையும் தருக. (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) ஒரு கடவுச் சீட்டுக்கும் ஒரு வீசாவுக்குமிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.
(விடைக்கு 5 வரிகள் போதுமானது)

**எதிர்பார்க்கப்படும் விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

2. (1) (1) இலங்கைத் துறைமுகங்களிலிருந்து செல்லும் கப்பல்களுக்கு போதிய நிரப்புக்களை வழங்குதல்.
(2) துறைமுகங்கட்கு போதிய கப்பல்கள் வருவதை உறுதிப்படுத்தல்.
(3) உள்நூர் கப்பலிடுகையை அபிவிருத்தி செய்வதில் உதவி செய்தல்.
(4) ஏற்றுதல் இறக்குதல் நடவடிக்கைகளை விருத்தி செய்தல்.
(5) கப்பற் கட்டணம், மேலதிக கட்டணங்கள், இறைமை அறிவிப்பை பற்றி கப்பல் உரிமையாளர்களுடன் பேரம் பேசுதல்.
(6) பொருட்களைக்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் அதற்காக கப்பற் கம்பனிகளுடன் உடன்படிக்கை செய்தலும்.
(7) கப்பற் சொந்தக் காரர்களின் கிராக்கியைக் குறைத்தல்.
(8) மிகவும் சாதகமான கேள்வு விகிதங்களைப் பெறுதல்.
(9) கப்பலிடுகை, கேள்வு தொடர்பாக ஆய்வு நடாத்தல்.
(4×1=4 புள்ளிகள்)

(11) (1) புதிய வாகனங்களைப் பதிவு செய்தல்.
(2) வருடாந்த அனுமதி பத்திரங்களை வழங்குதல்.
(3) சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
(4) எல்லா வாகனங்களும் பற்றிய ஒரு பூரண பதிவைப் பேணுதல்.
(5) உரிமை மாற்றத்தைப் பதிவு செய்தல்.
(6) தகுதி அத்தாட்சிப் பத்திரம் வழங்குதல்.

23ஆ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) புதிய நெடுஞ்சாலைச் சட்டத்தை அறிமுகம் செய்தல்.

(8) இலக்கத்தகடுகளை வரைப்படுத்தல். நிறம், அளவு போன்ற முறையில். (4×1=4 புள்ளிகள்)

(111)(அ) எண்ணெய்க்கப்பல்கள் ஆனவை விசேடமாக எண்ணெயை ஏற்றியிறக்குவதற்காக உற்பத்தி செய்யப்பட்டன (ஒரு புள்ளி)
கொள்கலக் கப்பல்கள் ஆனவை பெருமளவு எண்ணிக்கை கொண்ட கொள்கலன்களை ஏற்றியிறக்குவதற்காகக் கட்டப்பட்டது. கொள்கலக் கப்பல்கள் ஆனவை உடைதல், சேதங்கள், களவுகள் முதலியனவற்றைக் குறைக்க உதவுகின்றன. (1 புள்ளி)

(ஆ) (1) ஒரு தரத்தில் பெருமளவு எண்ணெய் ஏற்றியிறக்கப்பட முடியும்.
(2) குறைந்த விரயம்.
(3) ஒரு எண்ணெய்க்கப்பலில் இருந்து வேண்டிய எண்ணெய்த் தாங்கிக்குழாய் மூலம் எண்ணெயை அனுப்ப முடியும். எனவே போக்குவரத்து விரயம் கிடையாது.
(4) ஒரு சாதாரண கப்பல் மூலம் எண்ணெய் ஏற்றியனுப்பப்பட்டால் ஏனைய பொருட்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். அப்படிப்பட்ட பிரச்சினை இங்கு கிடையாது.
(2×1 =2 புள்ளிகள்)

(IV) (அ) (1) ஸ்விஸ் எயர், (2) பிரிட்டிஷ் எயர், (3) கே.எல்.எம்
(2×½=1 புள்ளி)

<u>காரணம்</u>.

போதியளவு பிரயாணிகள் இன்மை. (1 புள்ளி)

(ஆ) (1) கடவுச்சீட்டானது, ஒரு நாட்டினால், அதன் பிரஜை நாட்டை விட்டு வெளியேற அனுமதிப்பதற்காக வழங்கப்படுகிறது. ஆனால் வீசாவானது வேறொரு நாட்டினால் அந்நாட்டின் பிறநாட்டுப் பிரஜை நுழைவதற்கு வழங்கப்படுகிறது.
(2) கடவுச் சீட்டானது விண்ணப்பதாரியின் நாட்டு அரசினால் வழங்கப்படுகின்ற வேளை/ வீசாவானது ஒருவர் நுழையவிரும்பும் நாட்டுத் தூதுவராலயத்தினால் வழங்கப்படுகிறது.
(3) கடவுச்சீட்டானது சாதாரணமாக ஐந்து வருடங்களுக்குச் செல்லுபடியாகும். ஆனால் வீசாவானது ஒரு நாட்டினுள் நுழைவோர் வேண்டிக்கொண்ட காலத்திற்கு மட்டும் செல்லுபடியானது.
(4) கடவுச்சீட்டானது விண்ணப்பதாரியின் புகைப்படம், வேறு விபரங்களையுள்ளடக்கிய ஒரு சிறிய புத்தகமாகும். ஆனால் வீசாவானது சில குறிப்புகளுடன் கடவுச் சீட்டில் குறிக்கப்படும் ஒரு குறி அல்லது "சீல்" ஆகும். (2×1=2 புள்ளிகள்
(இரண்டு வேறுபாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடையளித்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்.**

இது பலரால் தெரிவு செய்யப்பட்ட வினாவாகும். இதில் (1)ம் பிரிவில் வினவப்பட்டு இருந்தது கப்பல் இடவசதிகளை ஆக்குதல் சம்பந்தமாக மத்திய சேவைப் பணியகத்தின் நோக்கங்களைப்பற்றியெனினும், பலர் இந் நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றியே விடையெழுதியிருந்தனர். இவ்வாறே (IV)(அ)ம் பிரிவிற்கும் பிழையற்ற விடை மிகக் குறைவாகவே காணப்பட்டது. மேலும் இப்பிரிவில் (ஆ) பகுதியில் கடவுச்சீட்டுக்கும் விசாவுக்கும் இடையிலான வேறுபாடு சம்பந்தமாகத் தெளிவான கருத்து மாணவர் இடையில் காணப்படவில்லை.

**3ம் வினா.**

3. (i) இருபது ஆண்டு ஆயுட் காப்புறுதிப் பூட்கையொன்றை எடுத்துள்ள ஒருவர் ஐந்து ஆண்டுகளுக்கான கட்டணங்களைச் செலுத்தியதன் பின்னர் பூட்கையை நிறுத்த விரும்புகிறார். அவரது இழப்பைக் குறைப்பதற்குக் கிடைக்கக்கூடியதாயுள்ள மாற்று வழிகளைச் சுருக்கமாக விளக்குக. (விடைக்கு 6 வரிகள் போதுமானது)

(ii) (அ) கடற்பாயக் காப்புறுதியில் 'பொதுச் சராசரி' எனப்படுவதால் கருதப்படுவது யாது? (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) கடற்பாயக் காப்புறுதியில் எச் சூழ்நிலைகளின் கீழ் நட்டவீடு பொதுவாகச் செலுத்தப்படுவதில்லை? (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(iii) (அ) விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தினால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் இரு நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக. (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு எவ்வகுதிகளைச் சேர்ந்த மக்கள் உதவுதொகை வழங்கத் தகுதி பெற்றவர்களாவர்? (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(iv) தனியார் ஆயுட் காப்புறுதிக் கம்பனிகளில் ஆயுளுறுதிப் பூட்கைகளைப் பெற்றுக்கொள்ளும் பூட்கையாளர் நலன்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் எடுத்துவரும் இரு நடவடிக்கைகளைக் கூறுக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது.)

**எதிர்பார்க்கப்படும் விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

(3) (1) (1) செலுத்தப்பட்ட பெறுமதியினைப் பெறுதல்—அதாவது "செலுத்தப்பட்ட பெறுமதிக் கொள்கை" யைப் பெறுதல். இதன்படி, கட்டணம் செலுத்துவதை அவர் உடனடியாக நிறுத்திக் கொள்வதுடன், இருபது வருட முடிவில் அவர் செலுத்திய கட்டணங்களின் மொத்தப் பெறுமதியையும் அதற்கான வட்டியினையும் பெற்றுக் கொள்வார்.

(2) ஒப்படைப்புப் பெறுமதியினைப் பெறுதல்.

(3) கட்டணம் செலுத்துவதை நிறுத்துவதுடன், அவர் ஏற்கனவே செலுத்திய பெறுமதியில் சிறிதளவு குறைந்த வீதப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளல். இது ஒரு குறுங்காலத்தினுள் பெற்றுக் கொள்ளப்படலாம்.

(2×2=4 புள்ளிகள்)

(இரண்டு வழிகள் எதிர்பார்க்கப்படுகின்றன)

(11) (அ) கப்பலுக்கு அல்லது பொருட்கட்கு ஏற்பட்ட எல்லா நட்டங்களும் எல்லாக் கட்சியினராலும் கூட்டாகப் பொறுப்பேற்றுக் கொள்ளப்படல் வேண்டும். (உதாரணமாக ஒரு கப்பல் தாழப்போகையில் கப்பலையும் பிற பொருட்களையும் காப்பாற்றுவதற்காக, சில பொருட்கள் கடலினுள் வீசப்படவேண்டி ஏற்படலாம்.

23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நட்டம் எல்லாக்கட்சியினராலும் பொறுப்பு ஏற்கப்படல் வேண்டும்). (2 புள்ளிகள்)

(ஆ) (1) கப்பற்காரர்கள் வேண்டுமென்றே பொருட்களைக்கடலில் வீசினால் - அது கண்டுபிடிக்கப்பட்டால்.

(2) அனுமதியில்லாமல் வழமையான பாதையில் இருந்து விலகிச் செல்லும்போது ஏற்படும் நட்டங்கள்/இழப்புக்கள்.

(இரண்டு சூழ்நிலைகள் தரப்படவேண்டும்) (2×1=2புள்ளி)

(111)(அ)1(1) அறுபது வயதில் இளைப்பாறிய ஊதியம்/நிதி.

(2) அறுபது வயதைத் தாண்ட முன் பகுதியளவில் இயலாமற் போனால். பகுதியளவில் கையாளாகாதவராகப் போனால் அல்லது அவர் அறுபது வயதை அடையும்போது முழு இளைப்பாற்று நிதியினைப் பெற்றுக் கொள்ளலாம்.

(3) முழுமையாக கையாலாதவராகப் போனால், மொத்த வெகும தீக் கொடுப்பனவொன்று அல்லது கையாலாகாதவராகப் போன திகதியில் இருந்து இறக்கும் வரை இளைப்பாற்று நிதி.

(4) மரண கொடை.

(5) 10 ஏக்கருக்கு குறைவான சிறு விவசாயிகளுக்கு இதனால் நன்மை பெறலாம்.

(ஆ)(1) 18 வயதுக்குட்படாத 59 வயதுக்கு மேற்படாத ஆண், பெண் இலங்கையர்கள்.

(2) நெல், வேறு தானியங்கள், வேறு உணவுப்பொருட்கள் மரக் கறி வகைகள், உருளைக்கிழங்கு, பழவகைகள், கரும்பு போன்றவற்றைப் பயிரிடும் நிலவுடமை கொண்ட விவசாயிகள், அல்லது வாடகை நில விவசாயிகள். (இரண்டு வகுதிகள் எதிர்பார்

(3) ஊழியர் சேமலாப நிதி செலுத்தாத எவரும். (இரண்டு வகுதிகள் எதிர்பார்க்கப்படுகின்றன)

(2×1=2 புள்ளிகள்)

(1V) (1) வர்த்தக கப்பற்றுறை அமைச்சின் கீழுள்ள காப்புறுதிக் கட்டுப்பாட்டால் தனியார் காப்புறுதிக் கம்பனிகள் மேற்பார்வைக்குட்படுத்தப்படக் கூடியன.

(2) காப்புறுதிக் கட்டணமாகப் பெற்றுக் கொள்ளப்படும் பணம் முதலீடு செய்யப்பட வேண்டிய துறைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை. சில நிபந்தனைகள் மீதே இக்கட்டணங்கள் முதலீடு செய்யப்படலாம்.

(3) காப்புறுதிக் கொள்கைகளின்/பூட்கைகளின் பெறுமதி பற்றிய நிபந்தனைகள். காப்புறுதிக் கம்பனிகள் தமது வழங்கிய மூலதனத்தின் ஒரு குறிப்பிட்ட வீத பெறுமதியுடைய காப்புறுதிப் பூட்கைகளை மட்டுமே வழங்க முடியும். வழங்கிய மூலதனத்தில் மாற்றம் ஏற்படும்போது பூட்கைகளின் பெறுமதியும் மாற்றம் ஏற்படலாம்

(4) நட்டங்களையும், காப்புறுதிக் கட்டணத்தையும் தீர்மானிப்பதற்கு காப் புறுதிக் கம்பனிகள் இத்துறை சார்ந்த நுட்ப வல்லுனர் ஒருவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமித்தல் வேண்டும். (2 × 2 = 4 புள்ளிகள்)

**விடையிறுத்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்**

இவ் வினாவுக்குப் பலர் விடையிறுத்திருந்தனர். எனினும் அளிக்கப்பட்ட விடைகள் அவ்வளவு திருப்திகரமாக அமையவில்லை. இதில் (iii) ம், (iv) ம் பிரிவுகளுக்குப் பலரால் அளிக்கப்பட்ட விடைகள் திருப்தியற்றவையாக இருந்தன.

**4 ம் வினா**

4. (i) இலங்கை வணிகக் கழகத்தின் நான்கு பிரதான குறிக்கோள்களைச் சுருக்கமாக விளக்குக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ii) (அ) தொழிற் சங்கமொன்றுக்கும் ஒரு நலன்பேண் சங்கத்திற்கு மிடையிலான இரு வேறுபாடுகளைக் கூறுக. (விடைக்கு 5 வரிகள் போதுமானது)

(ஆ) தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு இலங்கையிலுள்ள தொழிற்சங்கங்கள் எடுத்துவரும் நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(iii) (அ) கூட்டு உடன்படிக்கை என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (விடைக்கு 3 வரிகள் போதுமானது)

(ஆ) அத்தகைய உடன்படிக்கையொன்றின் நோக்கம் யாதென விளக்குக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(iv) குறித்தவொரு வகுதியைச் சேர்ந்த ஊழியர்களின் ஊதியத்தைத் துணிவதில் வேலைகொள்பவரொருவரால் கருத்திற் கொள்ளப்படும் நான்கு காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. (விடைக்கு 5 வரிகள் போதுமானது)

**எதிர்பார்க்கப்படும் விடைகளும், புள்ளி வழங்கும் திட்டமும்**

(4) (i) (1) வர்த்தகத்துறையை அபிவிருத்தி செய்தலும், பாதுகாத்தலும்.

(2) முக்கிய விடயங்கள் தொடர்பாக வியாபாரிகளின் கருத்துக்களை வெளிப்படுத்தல்.

(3) வியாபார சமூகத்திற்கும், அரசாங்கத்திற்குமிடையில் ஒரு தொடர்பாகத் தொழிற்படல்.

(4) அங்கத்தவர்கள் மத்தியில் வர்த்தகம், கைத்தொழில் நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களை விநியோகித்தல்.

(5) வர்த்தக, கைத்தொழிலின் விளைவாக ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல்.

(4×1 = 4 புள்ளிகள்)

(ii) (1) தொழிற் சங்கமானது ஒரு குறிப்பிட்ட வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட அங்கத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்படுகின்ற ஒரு சங்கமாகும். நலன் பேணும் சங்கமானது ஒருகுறிப்பிட்ட நிறுவனத்தின் அல்லது சமூகத்தின் அங்கத்தவர்களின் நலன்கட்காக அமைக்கப்படுகின்ற ஒரு சங்கமாகும்.

(2) தொழிற்சங்கங்கள் தொழிற் திணைக்களத்தின் கீழ்ப் பதிவு செய்யப்படுகின்றன. பொதுவாக நலன்பேண் சங்கமொன்று பதிவு செய்யப்பட வேண்டிய அவசியமில்லை.

(3) தொழிற்சங்கமொன்றின் அங்கத்துவமானது ஒரு நிறுவனத்திலுள்ள தொழிலாளர்கட்கு மட்டுமாக வரையறுக்கப்படுவதில்லை. ஆனால் நலன்பேண் சங்கமொன்றின் அங்கத்துவமானது ஒரு நிறுவனத்தின் தொழிலாளர்கட்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கும்.

(4) நிறுவனங்களில் [illegible] உத்தியோகபூர்வமான அங்கீகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. ஆனால் நலன்பேண் சங்கமொன்றுக்குப் போதமாக அது கிடையாது.

(ஆ)(1) பேச்சுவார்த்தை. (2 × 1 = 2 புள்ளிகள்)

(2) சட்டப்படி வேலை/மெதுவாகச் செல்லல்.

(3) கதவடைப்பு/சட்டமறுப்பு

(4) வேலைநிறுத்தம்.

(5) தொழில்மன்றுக்குமுன் செல்லல். (4 × ½ = 2 புள்ளிகள்)

(iii) (அ) ஒரு பக்கத்தில் தொழிலாளர்கட்கும், அவர்களின் தொழிற் சங்கங்களுக்கும், மறுபக்கத்தில் தொழில் வழங்குவோர் அல்லது தொழில் வழங்குவோர் சங்கங்களுக்கும் இடையிலான ஓர் உடன்படிக்கையாகும். (2 புள்ளிகள்)

(ஆ)(1) கைத்தொழிற் பிணக்கைத் தவிர்த்து, சாதாரண விதிகளின்படி தொழிலாளர் அனுபவிக்காத வேலைச் சூழ்நிலைகளை வழங்குவதன் மூலம் மேலதிக நலன்களை வழங்கி கைத்தொழில் அமைதியைக் கொண்டுவருதல். (2 புள்ளிகள்)

(iv) (1) நாட்டிலுள்ள பொதுக் கூலி மட்டம் - அதனைவிடக் குறைவாகச் செலுத்தல் ஊக்குவிக்காது.

(2) வாழ்க்கைச் செலவு - அத்துடன் இணங்கியதாகக் கூலி அமைய வேண்டும்.

(3) உழைப்புக்கான கேள்வியும், நிரம்பலும் - கூலி விகிதம் இவற்றின்மீது தங்கியுள்ளது.

(4) பேரம் பேசும் திறமை - இது கூட கேள்வி, நிரம்பலில் தங்கியுள்ளது.

(5) ஆகக் குறைந்த கூலிகள் தொடர்பாக அரசாங்க விதிகள் - இதற்கு மாறுபடுதல் சட்டரீதியற்றது.

(6) கொடுக்கப்படுகின்ற வேறு வசதிகளும், ஊக்குவிப்புக்களும்.
(குறிப்பிட 2 புள்ளிகள், விளக்க 2 புள்ளிகள் - 4 புள்ளிகள்)
(4 × 1 = 4 புள்ளிகள்)

<u>விடையளித்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்</u>

அதிகமானவர்களால் தெரிவு செய்யப்பட்ட வினாவாகும். எனினும் இலங்கை வணிகக் கழகத்தின் குறிக்கோள்கள் பற்றிப் பலர் சரியான முறையில் அறிந்திருக்கவில்லையென்பது விடைகளிலிருந்து தெரிய வருகின்றது. அதேபோல், இங்கு (IV)ம் பகுதிக்கு வழங்கப்பட்டிருந்த விடையும் போதியளவு திருப்தியானதாக அமையவில்லை.

<u>5 ம் வினா</u>

5. (i) (அ) மூலச்செலவுக்கும் (முதற்கிரயம்) தொழிற்சாலை மேந்தலைக்குமிடையிலான வேறுபாடு யாது? (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) கைத்தொழிலாளர் ஒருவருக்கு இவை இரண்டும் கூட்டுமொத்தமாக எதைக் காட்டுகின்றன வெளிப்படுத்தும்? (விடைக்கு 1 வரி போதுமானது)

(இ) அவரது மொத்தச் செலவு நோக்கில் இந்த இரு விடயங்களுள்ளும் எது கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது? (விடைக்கு 1 வரி போதுமானது)

(ii) ஏற்கனவேயுள்ள ஒரு தொழிலில் முதலீடு செய்யத் தீர்மானிக்குமுன் தக்க முதலீட்டாளர் ஒருவரால் கருத்திற் கொள்ளப்படும் இரு இலாபகர விகிதங்களைச் சுருக்கமாக விளக்குக. (விடைக்கு 6 வரிகள் போதுமானது)

(iii) குறித்த ஒரு வேளையில் கைநிறுவத்திலிருக்க வேண்டிய கையிருப்புக் கணியத்தைத் துணிய உதவும் நான்கு காரணிகளைக் கூறுக. (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(iv) (அ) கையிருப்பெடுத்தலைவரை யாது? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) கையிருப்பெடுத்தலின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.) (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கப்படும் விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(5)(i)(அ) மூலச் செலவு என்பது மூலப்பொருள், உழைப்பு, போக்குவரத்து, வேறு நேர் செலவுகள் போன்ற மூல உற்பத்திக் கிரயங்களை உள்ளடக்குகின்றது. தொழிற்சாலை மேந்தலையானது உற்பத்திச் செய்முறையோடு சம்பந்தப்பட்ட மற்றெல்லா நேரில் செலவுகளையும் கருதுகின்றது. (2 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மொத்தக் கிரயம். (1 புள்ளி)

(இ) மூலக் கிரயம் (1 புள்ளி)

(ii)(1) மொத்த இலாப (எல்லை) விகிதம்

$$\frac{\text{மொத்த இலாபம்}}{\text{மொத்த விற்பனைகள்}} \times 100$$

அல்லது

$$\frac{\text{விற்பனைகள் — விற்ற சரக்கின் கிரயம்}}{\text{விற்பனைகள்}} \times 100$$

(2) தேறிய இலாப விகிதம் $$\frac{\text{தேறிய இலாபம்}}{\text{விற்பனைகள்}} \times 100$$

(3) மொத்தச் சொத்துக்கள் மீதான விளைவு / திரும்பல்

$$\frac{\text{தேறிய இலாபம் — வட்டி}}{\text{மொத்தச் சொத்துக்கள்}} \times 100$$

(4) உரிமை முதல் மீதான திரும்பல் / விளைவு

$$\frac{\text{தேறிய இலாபம் — வட்டி}}{\text{சாதாரண பங்காளர் உரிமை}} \times 100$$

(ஏதாவது இரு விகிதங்கள்) (2 × 2 = 4 புள்ளிகள்)

(iii)(1) பாவனை விகிதம் (வியாபார நடவடிக்கைகளின் தேவை)
(2) முதன்மைக் காலம் (பொருட்களைக் கட்டளையிட்ட திகதியில் இருந்து பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும்வரையிலான காலம்)
(3) கிடைக்கக்கூடிய மீதித்தொகை.
(4) கட்டளைக் கிரயம் (4 × 1 = 4 புள்ளிகள்)
(5) பராமரிப்புக் கிரயம்

(iv)(அ) களஞ்சியத்திலுள்ள எல்லாப் பொருட்களினதும் மீதித் தொகைகளைப் பௌதீகரீதியாகக் கணக்கிடுதல் அல்லது பரிசோதித்தலாகிய மொத்தச் செய்முறை இதுவாகும். (1 புள்ளி)

(ஆ)(1) இருப்புப் பதிவுகளின் சரியான தன்மையைப் பரிசோதித்தல்.
(2) ஐந்தொகையிற் தரப்பட்டுள்ள மீதி இருப்புப் பெறுமதியின் சரியான தன்மையை உண்மையாகப் பரிசோதித்தலும், உறுதிப்படுத்தலும்.
(3) களவு, ஊழல், ஏமாற்றம் ஆகியவற்றிற்கான சந்தர்ப்பங்களை இனங்காணுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) சரக்கிருப்பு முகாமையினதும், கட்டுப்பாட்டினதும் பலவீனங்களைக் கண்டு பிடித்தல். (3 × 1 = 3 புள்ளிகள்)

<u>விடையிறுத்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்</u>

இதுவும் பெரும்பாலாரால் தெரிவு செய்யப்பட்ட வினாவாகும். எனினும் இவ்வினாவின் (iii) ம் (iv) ம் பிரிவுகளில் கையிருப்பு சம்பந்தமாகக் கேட்கப் பட்டிருந்த கேள்விகட்கு, அளிக்கப்பட்டிருந்த விடைகள் அவ்வளவு திருப்திகரமானதாக அமையவில்லை.

<u>6 ம் வினா</u>

6. (i) இலங்கையில் வியாபாரம், கைத்தொழில் என்பவற்றின் அபிவிருத்திக்கு இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையத்தால் வழங்கப்பட்டுவரும் தொழிற்றுறைச் சேவைகள் யாவை? (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ii) (அ) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோள்கள் யாவை? (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) அதன் பங்கு மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்து வந்துள்ள இரு வெளிநாட்டு நிறுவனங்களைப் பெயரிடுக. (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(iii) 77 நாடுகளின் குழு என்பதன் கருத்தையும் அக்குழுவின் குறிக்கோள்களையும் விளக்குக. (விடைக்கு 6 வரிகள் போதுமானது)

(iv) (அ) பாங்கொக் உடன்படிக்கையானது யாது? (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

(ஆ) இவ்வுடன்படிக்கையிற் சேர்ந்து கொண்ட நான்கு நாடுகளைப் பெயரிடுக. (விடைக்கு 1 வரி போதுமானது)

<u>எதிர்பார்க்கப்படும் விடைகளும், புள்ளி வழங்கும் திட்டமும்</u>

(6)(i)(1) முயற்சியாளர் அபிவிருத்தி
(2) முகாமை அபிவிருத்தி
(3) முதலீட்டுச் சேவைகள்
(4) வர்த்தக, பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கல்.
(நான்கு சேவைகள் எதிர்பார்க்கப்படுகின்றன) (4 × 1 = 4 புள்ளிகள்)

(ii)(அ)(1) கைத்தொழில், விவசாய, வர்த்தகத்துறை (தனியார் துறை வியாபார நிறுவனங்கள்) நிறுவனங்களை நிறுவுதல், அபிவிருத்தி செய்தல், விரிவுபடுத்தல், நவீன மயப்படுத்தல்.
(2) இவ்வியாபாரங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு மூலதனத்தைப் பயன்படுத்துவதை அபிவிருத்தி செய்தலும், ஊக்குவித்தலும்.
(இரண்டு குறிக்கோள்கள் எதிர்பார்க்கப்படுகின்றன) (2 × 1 = 2 புள்ளிகள்)

(ஆ)(1) சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்.
(2) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகட்கான நெதர்லாந்து நிதிக் கூட்டுத்தாபனம்.
(3) பொது நலவாய நாடுகள் அபிவிருத்தி நிதிக் கம்பனி.
(4) பொருளாதாரக் கூட்டுறவுக்கான ஜேர்மன் சமூகம் (சொசைட்டி) (2 × 1 = 2 புள்ளிகள்)

(iii) கருத்து—ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க அபிவிருத்தியடையும் நாடுகளை உள்ளடக்கிய 77 நாடுகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு குழு அல்லது தொகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவாரும். இக் குழுவில் இலங்கையும் உள்ளடங்குகின்றது.

(2 புள்ளிகள்)

குறிக்கோள்கள் - இக்குழு பொருளாதார, அரசியல், சர்வதேசப் பிரச்சினைகள் விடயத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நோக்குகளை/கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றது. (2 புள்ளிகள்)

(iv) (அ) தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு தீர்வைச் சலுகைகளை வழங்குவதற்கு அங்கத்துவ நாடுகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒர் உடன்படிக்கையாகும். (2 புள்ளிகள்)

(ஆ) இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், லாவோஸ், கொரியா.

(4 × ½ = 2 புள்ளிகள்)

விடையிறுத்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்

இது மிகவும் குறைவானவர்களால் தெரிவுசெய்யப்பட்ட வினாவாகும். அதேபோல் இதில் எல்லாப் பிரிவுகட்கும் வழங்கப்பட்டிருந்த விடைகளும் பெரும்பாலும் திருப்தியற்றனவாகவே இருந்தன. இவ் வினாவில் வர்த்தகத்தோடு தொடர்புடைய உள்நாட்டுத் தாபனங்கள் பற்றி வினவப்பட்டிருந்தபோதிலும் இவைபற்றிப் பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

7 ம் வினா

7. (i) கடை, அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டத்தின் குறிக்கோள்கள் யாவை? (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ii) (அ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எந்த அமைச்சின் கீழ் தொழிற்பட்டு வருகின்றது? (விடைக்கு ½ வரி போதுமானது)

(ஆ) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மூன்று குறிக்கோள்களை விளக்குக. (விடைக்கு மூன்று வரிகள் போதுமானது)

(iii) (அ) தற்பொழுது எவ்வெல்லைக்குக் கீழ்ச் சேர்ந்த ஊழியர்கள் வருமான வரியிலிருந்து விலக்குப் பெற்றுள்ளனர்? (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(ஆ) பின்வருவனவற்றுள் நீர் விளங்கிக்கொள்வது யாதென விளக்குக.
(i) முத்திரை வரி (ii) செல்வ வரி (விடைக்கு 4 வரிகள் போதுமானது)

(iv) (அ) ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் இரு குறிக்கோள்களை விளக்குக. (விடைக்கு 6 வரிகள் போதுமானது)

(ஆ) இந் நிதியங்களுக்கு அனுமதிக்கப்படும் முதலீடுக்கான இரு பரப்புகளைக் கூறுக. (விடைக்கு 2 வரிகள் போதுமானது)

எதிர்பார்க்கப்படும் விடைகளும், புள்ளி வழங்கும் திட்டமும்

(7) (i) (1) தொடர்பான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கட்கு வேலைச் சூழ்நிலைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

(2) வேலை மணித்தியாலங்களை நிர்ணயித்தல்.

(3) மேலதிக நேர வேலைக் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

(4) கூலிகள், சம்பளங்கள் தொடர்பான சட்ட விதிகளை அமுல் நடாத்தல்.

(5) பெண் தொழிலாளர்கட்குப் பிள்ளைப் பேறுகால நல வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல். (4 × 1 = 4 புள்ளிகள்)

(ii) (அ) தொழில் அமைச்சு (1 புள்ளி)

(ஆ) (1) இலங்கையருக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை விரிவுபடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களைப் பதிவு செய்தலும், கட்டுப்படுத்தலும்.

(3) வெளிநாட்டு வேலைக்காக தொழிலாளர்களைப் பயிற்றுவித்தல்.

(4) வெளிநாடுகளில் அவர்களின் நலன்களையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல்.

(5) திரும்பி வந்ததும், மறுவாழ்வளிப்பதும், அவர்களின் சேமிப்பை முதலிட வழி காட்டலும்.

(6) தொழிலாளர் நல நிதியொன்றை உருவாக்கல்.

(7) வெளிநாட்டுத் தொழிற் துறையில் ஆய்வுகள், அளவீடுகள், எல்பவற்றை நடாத்துதல். (3 × 1 = 3புள்ளிகள்)

(iii)(அ)(1) மேலதிக வருட வருமானம் ரூபா 27,000/- இனை விஞ்சாத எல்லாப் பொதுத்துறை ஊழியர்களும் (கூட்டுத்தாபன, உள்ளூராட்சி ஊழியர்கள் உட்பட)

(2) வருடாந்த வருமானம் ரூபா 27,000/- இனை விஞ்சாத ஏனைய எல்லாவகையான ஊழியர்களும் (இரண்டு வகுதிகள் எதிர்பார்க்கப்படுகின்றன) (2 × 1 = 1 புள்ளிகள்)

(ஆ)(1) அரசாங்கம் முத்திரைகளினால் பெற்றுக்கொள்கின்ற வரிகள். உ-மாக, சொத்துக்களின் பெறுமதிகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் உறுதிகள், பற்றுச் சீட்டுக்கள் என்பவற்றிற்கான முத்திரை வரி. (1 புள்ளி)

(2) ஒரு நபருடைய அல்லது நிறுவனத்தினது சொத்துப் பெறுமதிமீது விதிக்கப்படுகின்ற ஒரு வரி. (1 புள்ளி)

(iv)(அ)(1) முதலீட்டு நிதி வழங்குதலில் பங்குபற்றுதல் மூலம் தொழிலாளர் உரிமைகள், நலன்கள், பொருளாதார சுதந்திரம் என்பனவற்றை அபிவிருத்தி செய்தல்.

(2) நிறுவனங்களின் சாதாரண பங்குகளைக் கையேற்பதன்மூலம் முகாமையில் தொழிலாளர் பங்குபற்றலை அபிவிருத்தி செய்தல்.

(3) தொழிலாளர் இளைப்பாறும்போது, பங்களிப்புச் செய்யாமலே நலன்களைப் பெறுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல்.

(4) தொழிலாளர் நலன்களுடன் சம்பந்தப்பட்ட வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். (2 × 1 = 2புள்ளிகள்)

(ஆ)(1) எந்த நிறுவனத்தினதும் பங்குகளில் முதலீடு.

(2) வர்த்தக, கைத்தொழில் முயற்சிகளை நிறுவுதல்.

(3) அசைக்க முடியாத ஆதன அபிவிருத்தி. (2 × 1 =2புள்ளிகள்)

<u>விடையிறுத்தல் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய சில விசேட அம்சங்கள்</u>

இதற்கும் மிகக் குறைவானவர்களே விடையளித்துள்ளனர். இதில் (i)ம் (ii)ம் பிரிவுகட்கு ஓரளவு திருப்தியான விடையளித்திருந்தபோதிலும், (iii)ம் (iv)ம் பிரிவுகட்குப் பலர் அளித்த விடை திருப்தியற்றனவாகவே காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி 111

## அவதானங்களும் பிரேரணைகளும்

### பாடம் தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய விசேட அம்சங்கள்

பாடத்திட்டம் சம்பந்தமான அடிப்படை அம்சங்களையும், கொள்கை களையும் சகல பரீட்சார்த்திகளும் தெளிவுற அறிந்திருத்தல் அவசியமாகும். இதற்கு மேலதிகமாக பாட அம்சங்கள் சம்பந்தமாகக் காலத்திற்குக் காலம் ஏற்படும் மாற்றங்களையும், அபிவிருத்திகளையும் பற்றிப் போதிய அறிவு பெற்றிருத்தல், சிறப்புச் சித்தியை எதிர்பார்ப்போருக்கு அதிக பயனுடையதாகும்.

### பரீட்சார்த்திகளின் பொதுவான குறைபாடுகள்

(1) இம்முறையும் வினாப் பத்திரங்கள் இரண்டிலும் வர்த்தகத்திற்குரிய பல அடிப்படை அம்சங்கள் பற்றி அதிக வினாக்கள் இடம்பெற்றிருந்தன. இப் பாடத்தைக் கற்கும் அனைவரும் அவைபற்றிய அறிவைத் தவறாது பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறிருந்தபோதிலும், விடைப்பத்திரங்களைப் பரீட்சித்தபோது, கணிசமானோர் இவ் அடிப்படை அம்சங்கள்பற்றிப் போதியளவு அறிந்திருக்கவில்லையென்பது தெரிய வந்தது.

(2) பல பரீட்சார்த்திகள், வினாக்களைச் சரியாக வாசித்து விளங்கிக்கொள்ளாது, விடையளித்திருந்தமையால் உரிய புள்ளிகளைப் பெறவில்லையென்பதைச் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது. பரீட்சகர் குழுக்கள் பலவற்றின் பிரதம பரீட்சகர்களின் அறிக்கைகளில் இவ் விடயம் விசேடமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(3) இப் பரீட்சையின் அடிப்படை நோக்கம், விடய அறிவு சம்பந்தமான தெளிவு பரீட்சார்த்தியிடம் உண்டா எனப் பரீட்சிப்பதாகும். எனவே, அளிக்கப்படும் விடை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமது விடய அறிவைத் தெளிவாகக் காட்டுவதாக அமைதல் வேண்டும். எனினும் பல பரீட்சார்த்திகளின் விடைகளில் கூறப்பட்டுள்ள விடயங்கள், விடய அறிவு உள்ளவர்களிடமிருந்து எதிர்பார்க்கக்கூடியன அல்ல. இதனை வேறு வகையில் குறிப்பிடுவதெனில், மிகத் தெளிவான முக்கிய விடயங்கள் பல விடையாக அளிக்கக்கூடியதாக இருந்தபோதிலும், பிழையெனக் குறிப்பிட முடியாத - ஆனால் முக்கியத்துவம் மிகக் குறைந்த விடயங்கள் விடையாக அளிக்கப்பட்டிருந்தமை காணக்கூடியதாக இருந்தது.

(4) இம்முறை, வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளின்படி இப் பாடத்தின் மிக முக்கிய பகுதியாகக் கருதப்படும் சில உப தலைப்புக்களுக்கேற்பத் தயாரிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட வினாக்களுக்கு, பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகள் பொதுவாகக் குறைந் துள்ளதைக் காண்கிறோம். உதாரணமாக, சந்தைப்படுத்தல், வர்த்தகத்தோடு தொடர்புள்ள உள்நாட்டு - வெளிநாட்டு நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கட் குப் பொருத்தமான பொதுவான விதிகளும் சட்டங்களும், வரி போன்ற தலைப் புக்களின் கீழ் எடுக்கப்பட்ட வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகள் பெருமள வில் திருப்தியற்றனவாகவே காணப்பட்டன.

(5) காலத்திற்குக் காலம் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப இப் பாட அம்சங்களிலும் மாற்றங்கள் ஏற்படும். இதனால் வர்த்தகவியல் போன்ற பாடங்களைக் கற்போர் அவ்வாறான மாற்றங்கள் சம்பந்தமாக எப் பொழுதும் தெளிவுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். எனினும், விடைப் பத்திரங் களைப் பரீட்சிக்கும்போது, இது சம்பந்தமாக மாணவர்களின் அறிவு கணிசமான அளவில் குறைவாக இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. உதாரணமாக, நியாய வியாபார ஆணைக்குழு, நிதிக் கம்பனிகளின் கட்டுப்பாடு சம்பந்தமாக அண்மையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், சில விமானக் கம்பனிகள் இலங்கைக் கான சேவையை நிறுத்தியமை போன்ற விடயங்கள் சம்பந்தமாக நாளிதழ்கள் போன்றவற்றின்மூலம் அடிக்கடி போதுமான பிரசித்தம் கொடுக்கப்பட்டபோதி லும், இவை சம்பந்தமாக மாணவர்களின் அறிவு குறைவாகவே காணப்பட்டது.

(6) சில பரீட்சார்த்திகளின் எழுத்துத் தெளிவற்றதாக இருந்தது. இதனால் சில சந் தர்ப்பங்களில் பரீட்சார்த்திகளுக்குப் பிரதிகூலம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ் விடயம் இதற்குமுன்னரும் அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

<u>கற்றல், கற்பித்தல் சம்பந்தமான அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும்.</u>

(அ) இது அதிகம் நடைமுறை விடயங்களோடு தொடர்புள்ள பாடமாதலால், அவற் றில் விசேட கரிசனை காட்டப்படல் வேண்டும். அதேபோல் எல்லாத் தலைப்புக் களுக்கும் உரிய அடிப்படை விடயங்களிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். இவை சம்பந்தமான அடிப்படைக் கொள்கைகள் பற்றி முதலில் தெளிவுபடுத்தி அவற்றுடன் தொடர்புடைய நடைமுறை விடயங்களை விளக்குவது பொருத்தமாகும். இம்முறை வினாப்பத்திரத்தில் வர்த்தகம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறுவதற் கேனும் பல மாணவர்களால் இயலாமல் போனமை இக் குறைபாட்டை வெளிக் காட்டியது.

(ஆ) இப் பாடம் சம்பந்தமாக நடைமுறை அறிவு மாணவர்களைப் போலவே ஆசிரி யர்களுக்கும் அவசியமாகும். இது சம்பந்தமாகப் பயனுடைய நூல்கள், பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களின் வெளியீடுகள், அறிக்கைகள் என்பனவற்றைப் பாடசாலை நூலகத்திற்குப் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிக்கலாம். அத்தோடு, மாணவர்களின் உதவியுடன் தேவைப்படும் தகவல்களைத் திரட்டுவது இலகுவாகும்.

(இ) பாடத்துடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய ஏனை நூல்கள், நாளிதழ்கள் போன்றவற்றை வாசிப்பதற்கும், வானொலி நிகழ்ச்சிகட்குச் செவிமடுப்பதற்கும், முக்கிய தகவல்களைக் குறித்து வைப்பதற்கும் மாணவரை ஊக்குவிப்பது சிறந்ததாகும்.

(ஈ) இப் பரீட்சையின் வினாப் பத்திரங்கட்கு நிகரான மாதிரி வினாப் பத்திரங்களுக்கு, விடையளிக்கச் செய்து மாணவரைப் பயிற்றுவிப்பது நன்று. அவ்வேளை வினாவை நன்கு விளங்கி, தேவைப்படும் விடயங்களை மட்டும் எழுதுவதின் முக்கியத்துவத்தை மாணவர்க்குக் காண்பித்தல் வேண்டும். இப் பரீட்சையின் கடந்த-கால வினாப் பத்திரங்களும் அவற்றுக்கான விடைகளும் இது சம்பந்தமாக மாணவரை வழிப்படுத்தலாம்.

(உ) இவ் அறிக்கையில் இடம்பெற்றிருக்கும், விண்ணப்பதாரிகளின் பொதுவான குறைபாடுகளில் மாணவரின் அவதானிப்பைச் செலுத்தி, அவற்றைத் தவிர்த்துக்கொள்வதற்காக மாணவர்க்கு வழிகாட்டுதல் ஆசிரியர்களின் கடப்பாடாகும்.

<u>பாட அறிவை விரிவுபடுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய நூல்களும், சஞ்சிகைகளும்</u>

வர்த்தக நடவடிக்கைகளைப் புரியும் இலங்கையின் அரச திணைக்களங்கள், தாபனங்கள், வங்கிகள், சபைகள் போன்றனவற்றால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் வெளியீடுகள், வருடாந்த அறிக்கைகள், சஞ்சிகைகள் போன்றனவற்றைப் பார்வையிடுதல் மிகவும் பயனுடையதாகும். உதாரணமாக இலங்கை மத்திய வங்கி, இலங்கைக் கட்டளைகள் பணியகம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, வர்த்தகத் திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை போன்ற நிறுவனங்களின் வெளியீடுகளைக் காண்பிக்கலாம்.

இதற்கு மேலதிகமாக இப் பாடம் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள நூல்களை வாசிப்பதன் மூலம் அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ளலாம்.

********

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kilinochchi Hindu M. V.
No.
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org